மலர்-2 இதழ்-47 ஆகஸ்ட் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# சிவாலயம் எழுப்பினால் கிடைக்கும் பலன்கள்



# ஆடிமாதமும் கூழ்வார்த்தலும்

ஆடி மாதம் வந்து விட்டால் போதும், சின்னஞ்சிறிய அம்மன் கோயிலில் கூட கூழ் வார்த்தல் என்பது விமரிசையாக நடக்கும். கூழ் வார்த்தலுக்கும், அம்மனுக்கும் என்ன தொடர்பு? ஜமதக்னி முனிவரும் அவர் மனைவியான ரேணுகா தேவியும் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். தன்னுவன், அனுவன், விஸ்வாவசு, பரசுராமன் என நால்வர் பிறந்தார்கள். அதன்பின்...

ஒருசமயம், கார்த்தவீரியனின் பிள்ளைகள் ஜமதக்னி முனிவரிடம் பகை கொண்டு அவரைக் கொன்று விட்டார்கள். கணவரை இழந்த ரேணுகா தேவி உயிர் வாழ விரும்பாமல் தீயில் இறங்கினாள். அப்போது, இந்திரன் வருணனை அழைத்து மழை பொழியச் செய் தான். தீ அணைந்தது. ஆனால், அதற்குள் ரேணுகா தேவியின் ஆடைகள் எல்லாம் எரிந்து போய், உடலில் தீக்கொப்புளங்கள் உண்டாயின. அவள் ஆடை இல்லாதநிலையில் காட்டில் இருந்த வேப்பிலையைப் பறித்து ஆடை போல் அணிந்து கொண்டாள். இதுவே, அம்மனுக்கு வேப்பிலை ஆடை அணியும் வழக்கம் உருவானவரலாறு. வேப்பிலை ஆடையில் புறப்பட்ட ரேணுகா தேவி, காட்டில் வாழ்ந்தவர்களிடம், 'பசிக்கிறது' என உணவு கேட்டாள்.

அங்கிருந்தவர்கள் சற்று விலகி நின்று, "அம்மா! நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள். நீயோ, அந்தணப் பெண்ணைப் போலத் தோற்ற மளிக் கிறாய். உனக்கு எங்கள் உணவைத் தரக் கூடாது. அதற்குப் பதிலாக பச்சரிசி மாவு, வெல்லம், பானகம், இளநீர் இவற்றைப் பெற்றுக் கொள்'' என்று அளித்தனர்.

இந்த பச்சரிசிமாவையே திருநெல்வேலி மாவட்டகிராமங்களில் 'துள்ளு மாவு' என்கிறார்கள். உரலில் இட்டு இடிக்கும் போது துள்ளிக்குதிப்பதால் இந்தப் பெயர் வந்தது. அரிசிமாவு கொண்டு ரேணுகா கூழ் காய்ச்சிக் குடித்து பசியாறினாள். அவர்கள் தந்ததைக் கொண்டு பசி யாறிக் கொண்ட ரேணுகாதேவி, சலவைத் தொழிலாளர்கள் வாழும் பகுதிக்கு வந்து அவர்கள் அளித்த ஆடைகளை அணிந்து கொண்டாள். அப்போது ரேணுகாதேவியின் மனதில் மீண்டும் துயரம் எழுந்தது. கணவரை எண்ணிக் கண்ணீர் சிந்தினாள்.

சிவபெருமான் அவளுக்கு காட்சியளித்து, "ரணுகாதேவி! சக்தியின் அம்சம் நீ! மனித குலத்தை தீமையில் இருந்து காப்பாற்றும் சக்தியை உனக்கு அளிக்கிறேன். நீ கொண்ட கொப்புளங்கள், மக்களுக்கு அம்மைக் கொப்பு ளங்களாக ஆகும். நீ அணிந்த வேப்பிலை ஆடையே, அந்த துன்பத்தை நீக்கும் மருந்தாக அமையும். நீ உணவாகக் கொண்ட பானகம், இளநீர், பச்சரிசி மாவு, வெல்லம் ஆகியவற்றை பக்தர்கள் நைவேத்யமாகப் படைப்பார்கள். உன்னை நாடி வழிபடுவோரின் துயரத்தை நீக்கு!'' என்று வரம் அளித்து மறைந்தார்.

அதன் பின், ரேணுகா தேவி முத்துமாரி எனப் பெயர் பெற்றாள். இந்த நிகழ்ச்சி மழைக் காலத்தின் தொடக்கமான ஆடி மாதத்தில் நடந்தது. அதன் காரணமாகவே மாரியம்மன் கோயில்களில் ஆடி மாதத்தில் கூழ் வார்த்தலும், பெண்கள் வேப்பிலை ஆடை கட்டி வலம் வரும் வேண்டுதலும் நடக்கின்றன.

இம்மாதத்தில் கூழ்வார்த்தல் வைபத்தில் கூழ் மற்றும் வேப்பிலையை ஒன்று சேர அருந்தினால் ஒருசில வைரஸ் கிருமிகள் நம்மை அண்டாமல் தடுக்கும் என்பதை நம் முன்னோர் அன்றே கூழ்வார்த்தல் விழாவின் மூலம் தெரிவித்துள்ளனர்.

www.aanmeegamalar.com







# பார்வை தரும் பெருமாள்



காஞ்சிபுரத்தில் உள்ள அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் உள்ள உற்சவருக்கு, "அழைத்து வாழ வைத்த பெருமாள்'' என்ற விசித்திரமான பெயர் இருக்கிறது.

இத்தலத்தின் விருட்சமாக இருப்பது அரசமரம். மரத்தின் எதிரே கரியமாணிக்க வரதர் சன்னதி உள்ளது. புத்திரதோஷம் உள்ளவர்கள் அமாவாசையுடன், திங்கள் கிழமை சேர்ந்த நாளில் மரத்தை யும், சன்னதியையும் சுற்றிவந்து வழிபடுகி றார்கள். பக்தர்கள் இத்தலத்தை, கண் பார் வையை சரியாக்கும் தலம் என்றும் கூறுகின்றனர்.

ராமானுஜருக்காக கண்களை இழந்த கூரத்தாழ்வார், இழந்த தனது பார்வையை மீண்டும் பெற்ற தலம் என்பதால், கண் நோய் நீங்க இங்கு வேண்டிக் கொள்கின்றனர்.

காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங்களைக் குறிக்கும் விதமாக மூலஸ்தான படிகள், மதிலில் பதிக்கப்பட்ட கற்கள், தீர்த்தக்கரை படிகள் ஆகியவை 24 என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

# சாப்பிடும் முறை...

சமைப்பது என்பது மிகப்பெரிய கலை, சமைக்கும் போது ஒருசில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று முன்னோர்கள் சொல்லி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம், அதே பெரியவர்கள் "சாப்பிடு வது எப்படி?'' என்பதுபற்றியும் சாஸ்திரம் வகுத்துள்ளனர். அதில் ஒருசிலவற்றை பார்ப்போம்.

- ❖ பகலில் ஒரு வேளையும், இரவில் ஒரு வேளையும் மட்டுமே போஜனம் செய்ய வேண்டும். சந்தியா காலம், விடியற்பொழுது, நடுநிசி ஆகிய வேளைகளில் எதையும் புசிக்கலாகாது.
- ❖ தாமரை இலை தவிர, வேறு எந்த இலையிலும் பின்புறத்தில் சாப்பிடக் கூடாது.
- ❖ போஜன காலத்தில் பேசினால், ஆயுள் குறையும்.
- ❖ ஈர வஸ்திரத்துடனும், ஒற்றை வஸ்திரத்துடனும் சாப்பிடக் கூடாது.
- ❖ மனைவி சாப்பிடும் போது, கணவன் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.
- ❖ பந்தி போஜனம் பண்ணும்போது, முன்னதாக எழுந்து விடலாகாது. அப்படி எழுந்து விட்டால், அந்தப் பந்தியைச் சேர்ந்த மற்றவர்களின் பாவத்தை அவன் அடைய வேண்டும்.
- ❖ பழம், பட்சணம் இவைகளைக் குழந்தை களுக்கு முதலிலும், மற்ற பதார்த்தங்களைப் பெரியவர்களுக்கு முதலிலும் பரிமாற வேண்டும்.




www.aanmeegamalar.com




# ஸ்தூலம், சூட்சுமம், காரணம்

## வடிவமாக காட்சிதரும்

# காமாட்சி

மக்களைக் காக்கும் அம்மனுக்குப் பல பெயர்கள் இருந்தாலும் ஒருசில பெயர்களுக்கேற்ப அம்பாள் மிகுந்த கருணை கடாட்சம் மிகுந்தவளாக காட்சியளிப்பாள். இதில் காமாட்சி அம்மனின் எழில் தோற்றம் மட்டுமல்ல, அவள் வீற்றிருக்கும் சன்னதியில் ஒருசில நொடிகள் அவளை தரிசித்தாலே உண்மையான பக்தனின் உள்ளம் பூரிப்படையும்.

காமாட்சி என் சொல்லுக்கு கருணையும், அன்பும் நிறைந்த கண்களையுடையவள் என்று பொருள். அன்னை காமாட்சி எழுந்தருளி, நமக்கெல்லாம் அருள்புரியும் திருத்தலமான காஞ்சிபுரம் பெரும் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது.

அன்னை பராசக்தி தேவியின் அருள் நிறைந்து விளங்கும் முக்கிய திருத்தலங்கள் மூன்று. அவை:

காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி திருக்கோயில்களாகும். இவற்றில் காஞ்சி காமாட்சி அன்னை ஆலயம் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

புண்ணிய பூமியான பாரத தேசத்தில் (இந்தியாவில்) உள்ள ஐம்பத்தொரு சக்தி பீடங்களுள், காமகோடி பீடம் என்று அழைக்கப்படும் காஞ்சிபுரம் முக்கிய இடம் வகிக்கிறது. ஸ்ரீ லலிதா திரிபுரசுந்தரியின் பூரண பிம்ப சொரூபிணியாகத் திகழ்வது, அருள்மிகு அன்னை காஞ்சி காமாட்சியின் மூல விக்கிரகம் ஒன்றுதான்.

அன்னை காமாட்சி கலைமகளையும் (சரஸ்வதி), திருமகளையும் (லட்சுமி) தன் இரு கண்களாகக் கொண்டவள். இத்தகு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட காஞ்சிமாநகரத்தில் அன்னை காமாட்சி தேவி எழுந்தருளிய சம்பவம் ஒரு ஆற்றல்மிக்க வரலாறாக விரிகின்றது.

முன்னொரு காலத்தில், பந்தகாசுரன் என்ற ஓர் அசுரன் வாழ்ந்து வந்தான். அவன் மிகக் கடுமையான தவங்களை மேற்கொண்டு, பிரம்ம தேவரிடமிருந்து அரிய பல வரங்களைப் பெற்றிருந்தான். அந்த வரங்கள் அளித்த சக்தியாலும், ஆணவத்தாலும் அவன் மூவுலகங்களையும் கைப்பற்றித் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பலவித துன்பங்களை உண்டாக்கி வந்தான்.

பந்தகாசுரனின் கொடுமைகள் நாள்தோறும் அதிகமாகி வந்ததால், அதிக துன்பமுற்ற தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானிடம் சென்று தங்கள் துன்பத்தைக் கூறி முறையிட்டார்கள். பிரம்மாவின் வரங்களைப் பெற்றதால் பந்தகாசுரன் மிகுந்த வலிமை பெற்றிருப்பதை உணர்ந்த சிவபெருமான், “அந்தப் பந்தகாசுரனை அழிக்கும் ஆற்றல் அன்னை பராசக்தி தேவிக்குத்தான் உள்ளது” என்று கூறி, அவர்களைப் பராசக்தியிடம் அனுப்பி வைத்தார்.

அத்தருணம், அன்னை பராசக்தி தேவி, காம கோட்டம் என்று அழைக்கப்படும் காஞ்சிபுரத்தில், கிளி வடிவம் கொண்டு, ஒரு செண்பக மரத்தில் அமர்ந்து சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து கொண்டிருந்தாள். தேவர்களும், முனிவர்களும் அன்னை இருக்கும் இடத்துக்கு வந்து, அவளை வழிபட்டுத் தங்கள் துயரங்களைக் கூறினார்கள்.

அவர்களின் துன்பத்தைக் கண்டு மனம் இரங்கிய அன்னை, பந்தகாசுரனைக் கொன்று, அவர்களின் துயரத்தைத் தீர்ப்பதாக உறுதியளித்தாள். அத்தருணம், பந்தகாசுரன் கயிலாயத்தில், ஒரு இருண்ட குகையினுள்ளே, ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதை அறிந்து, அவனைக் கொல்ல அதுவே தருணம் என்று முடிவு செய்த அன்னை, பதினெட்டுக் கரங்களில், பதினெட்டு வகையான ஆயுதங்களைத் தாங்கிய பைரவ ரூபிணியாக, உக்கிர உருவம் கொண்டாள்.

பந்தகாசுரனின் கழுத்தில் ஒரு பாதத்தையும், மார்பில் ஒரு பாதத்தையும் வைத்து, அவனது தலையை அறுத்து, ஒரு கையில் தூக்கிப் பிடித்தபடி காஞ்சிபுரம் வந்தடைந்தாள். உக்கிர கோப ரூபத்தில் வந்த அன்னையைக் கண்ட தேவர்களும், முனிவர்களும் பயத்தில் நடுங்கி மயங்கி வீழ்ந்தனர்.

அவர்களின் பயத்தைப் போக்க விரும்பிய அன்னை, உடனே, அழகிய பட்டாடை அணிந்த சிறு பெண்ணின் உருவத்தில், புன்னகை தவழும் முகத்துடன் அவர்களுக்குக் காட்சியளித்தாள். அத்தரிசனம் கண்டு, மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த தேவர்களும், முனிவர்களும் அவளைப் பலவாறும் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

அப்போது, அன்னை அவர்களைப் பார்த்து, அந்த

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

இடத்தில் ஒரு பள்ளம் தோண்டு மாறும், பந்தகாசுரனை அந்தப் பள்ளத்தில் இட்டுப் புதைத்து, புதைத்த இடத்தில் வெற்றித் தூண் ஒன்றை நிறுவுமாறும் கூறினாள்.

அன்னையின் கட்டளைப்படி தேவர்கள் அந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டியபோது, மல்லகன் என்ற கொடிய அரக்கன் அங்கே மறைந்திருப்பதைக் கண்டார்கள்.

அந்த அரக்கனை அழித்துத் தங்களைக் காக்கும்படி, மகாவிஷ்ணுவிடம் வேண்டினார்கள். தேவர்களின் கோரிக்கையை ஏற்று, மகாவிஷ்ணு மல்லகனுடன் போரிட்டார். ஆனால், மல்லகனின் உடலிலிருந்து வெளியாகும் ஒவ்வொரு துளி இரத்தமும் ஒரு அரக்கனாக உருமாறிப் போர் புரிந்தது.

இவ்வாறு அங்கே மாபெரும் அரக்கர் படையொன்று உருவாக்கி மகாவிஷ்ணுவுடன் கடுமையான போர் புரிந்தது. அரக்கனின் உடலிலிருந்து வெளிவரும் இரத்தத் துளிகள் ஒவ்வொன்றும் ஒரு அரக்கனாக உருவெடுப்பதைக் கண்ட மகாவிஷ்ணு, தம் உதவிக்குச் சிவபெருமானை அழைத்தார்.

சிவபெருமான் போர்க்கோலத்தில், ருத்ர மூர்த்தியாக அங்கே வந்தார். அவர் இரண்டு பூதங்களை உருவாக்கி, மல்லகனின் உடலிலிருந்து வெளிவரும் இரத்தத் துளிகள் எல்லாவற்றையும் பூமியில் விழாதபடி குடிக்கும்படி கட்டளையிட்டார். பூதங்கள் அப்படியே செய்தன. இவ்வாறு, மேலும் அரக்கர்கள் தோன்றாமல் தடுத்ததும், மகாவிஷ்ணு தம் சக்கராயுதத்தால் அந்த அரக்கனை அழித்தார்.

அதன்பின், அன்னை கட்டளையிட்டபடி, பந்தகாசுரனைப் புதைத்த இடத்திற்கருகில், இருபத்து நான்கு தூண் களை நிறுவி, காயத்ரி மண்டபம் அமைத்து, அந்த மண்டபத்தினுள்ளே, அழகிய பீடம் அமைத்து, அன்னையின் உருவம் ஒன்றைச் செய்து வைத்து வணங்கினார்கள். பின்னர், கதவை மூடிவிட்டு வெளியில் இருந்து அன்னையைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் அதிகாலை, சூரியன் உதய வேளையில், மிகுந்த பயபக்தியுடன் அவர்கள் அந்தக் கதவைத் திறந்தார்கள். என்ன ஆச்சரியம்? அங்கே அவர்கள் கண்ட அற்புதமான காட்சியைக் கண்டு மெய்சிலிர்த்து, மகிழ்ந்து நின்றார்கள். ஆம், அந்தக் காயத்ரி மண்டபத்தின் நடுவில், அவர்கள் நிறுவிய சிலை உருவத்துக்குப் பதிலாக, அன்னை காமாட்சி தேவி அழகிய திருக்கோலத்தில் காட்சியளித்தாள்.

அந்த நன்னாள், ஸ்வயம்பு மனுவந்திரத்தில், கிருத யுகத்தில், ஸ்ரீமுக வருஷம் பங்குனி மாதம் கிருஷ்ண பட்சத்தில், பிரதமை திதியும், பூர நட்சத்திரமும் கூடிய ஒரு வெள்ளிக்கிழமை நாள் ஆகும். எல்லையில்லாக் கருணை வடிவம் கொண்ட ராஜ ராஜேஸ்வரியாக காமாட்சி அன்னை காட்சியளித்தாள்.

அந்தக் காயத்ரி மண்டபத்தின் நடுவில் அன்னை தென் கிழக்காக, நான்கு கரங்களுடன், பத்மாசன கோலத்தில் காட்சியளித்தாள். அவளது நான்கு திருக் கரங்களில் பாசம், அங்குசம், மலர் அம்பு, கரும்பு வில் முதலியன காணப்பட்டன.

அன்னையின் அழகையும், கருணையையும் கண்டு பக்திப் பரவசமாகி மகிழ்ந்த தேவர்களும், முனிவர்களும், அன்னையை நோக்கி, அங்கேயே அமர்ந்து உலகம் வாழ அருள் புரியு மாறு வேண்டிக்கொண்டார்கள்.

அவர்களின் பிரார்த்தனைக்கிணங்கி, காமாட்சி அன்னை, இருபத்து நான்கு தூண்களாலான அந்தக் காயத்ரி மண்டபத்தின் மத்தியில் அழகிய பீடத்தில் அமர்ந்து அருளாட்சி செய்கின்றாள்.

தற்போது, அன்னை காமாட்சி திருக் கோயில் காஞ்சிபுரத்தின் மையப்பகுதியில், ஐந்து நிலைகளைக் கொண்ட அழகிய ராஜ கோபுரத் துடன், கண்களையும், உள்ளத்தையும் பக்திப் பரவசமாக்கும் ஓர் அழகிய, கம்பீரமான ஆலய மாக எழுந்து நிற்கின்றது. அன்னை காமாட்சி இத்திருக்கோயிலில் ஸ்தூலம், சூட்சுமம், காரணம் எனும் மூவகை வடிவிலும் அமைந்து அருள் புரிகின்றாள்.

பெரும்பாலான கோயில்களில் இவற்றில் ஒன்றிரண்டு வடிவில்தான் அன்னை காட்சியளிப்பாள். அந்த மூவகை வடிவங்களாவன:

**ஸ்தூல வடிவம்:**
காமகோடி காமாட்சி, மூல விக்கிரக உருவில்

**சூட்சும வடிவம்:**
அஞ்சன காமாட்சி (அரூப லட்சுமி)

**காரண வடிவம்:**
காமகோடி பீடம் எனப்படும் ஸ்ரீ சக்கரம்.

காமாட்சி அன்னைக்கு மகாதேவி, திரிபுரசுந்தரி, ராஜராஜேஸ்வரி, காமேஸ்வரி, லலிதா, ஸ்ரீ சக்கர நாயகி என்னும் திருப்பெயர்களும் உண்டு.

காஞ்சிபுரத் திருத்தலத்திலுள்ள எல்லா சிவாலயங்களுக்கும் காமாட்சி அம்பாளே மூலவர் அம்பாளாக விளங்குகிறாள். இதனால் காஞ்சீபுரத்தில் உள்ள சிவாலயங்களில், அம்பாளுக்குத் தனி சந்நிதிகள் இருப்பதில்லை.

அம்பாளின் உற்சவ மூர்த்திகள் மட்டுமே எல்லா சிவாலயங்களிலும் காட்சியளிக்கின்றனர். மூல மூர்த்தியான காமகோடி காமாட்சியின் இடது பக்கத்தில் வட திசை நோக்கியவாறு அரூப லட்சுமியாகிய அஞ்சன காமாட்சி காட்சியளிக்கின்றாள். இது அன்னையின் சூட்சும வடிவமாகும். இந்த அன்னைக்கு வடிவம் கிடையாது.

ஆனால், இவளது மேனியில் தடவப்படும் அர்ச்சனை குங்குமத்தின் மகிமையால் இவள் ஒரு அழகிய வடிவத்தைப் பெறுகின்றாள். இந்த அஞ்சன காமாட்சி தவம் புரியும் கோலத்தில் காட்சியளிக்கின்றாள்.

–ஆசிரியர்: நாகராஜன்,
தொடர்பு எண்: 08825844033.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# நட்சத்திர காயத்திரி

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு ராசி உள்ளது போன்று ஒவ்வொரு நட்சத்திரம் அவர்களுக்கு உண்டு என்பதை அறிவோம். இந்த வகையில் மொத்தம் 24 நட்சத்திரங்கள் உள்ளன.

இந்த நட்சத்திரத்தின் அமைப்பின்படியும் ஒருசில பலா பலன்கள் மாறும். ராசிக்குரிய தெய்வத்தை தரிசித்தாலும், நட்சத்திரத்திற்குரிய காயத்திரி மந்திரத்தை நாம் பயன்படுத்தும் போது அதித பலன்கள் ஏற்படும். அதன்படி அவரவருக்குரிய நட்சத்திர காயத்ரி மந்திரத்தை மனப்பாடம் செய்து தினமும் குறைந்தது 9 முறையாவது சொல்லுங்கள். வாழ்க்கையில் மிகச்சிறந்த முன்னேற்றம் காணலாம்.

## அஸ்வினி

ஓம் ஸ்வேத வர்ண்யை வித்மஹே
சுதாகராயை தீமஹி
தன்னோ அச்வநௌ ப்ரசோதயாத்

## பரணி

ஓம் க்ருஷ்ணவர்னாயை வித்மஹே
தண்டதராயை தீமஹி
தன்னோ பரணி ப்ரசோதயாத்

## கிருத்திகை

ஓம் வன்னிதேஹாயை வித்மஹே
மஹாதபாயை தீமஹி
தன்னோ க்ருத்திகா ப்ரசோதயாத்

## ரோஹிணி

ஓம் ப்ராஜாவிருத்யைச வித்மஹே
விச்வரூபாயை தீமஹி
தன்னோ ரோஹினி ப்ரசோதயாத்

## மிருகசீரிடம்

ஓம் சசிசேகராய வித்மஹே
மஹாராஜாய தீமஹி
தன்னோ ம்ருகசீர்ஷா ப்ரசோதயாத்

## திருவாதிரை

ஓம் மஹா ச்ரேஷ்டாய வித்மஹே
பசும்தநாய தீமஹி
தன்னோ ஆர்த்ரா ப்ரசோதயாத்

## புனர்பூசம்

ஓம் ப்ரஜாவ்ருத்யைச வித்மஹே
அதிதிபுத்ராய த தீமஹி
தன்னோ புனர்வஸு ப்ரசோதயாத்

## பூசம்

ஓம் ப்ரம்ம்வர்ச்சஸாய வித்மஹே
மஹா திஷ்யாய தீமஹி
தன்னோ புஷ்ய ப்ரசோதயாத்

## ஆயில்யம்

ஓம் ஸர்பராஜாய வித்மஹே
மஹா ரோசனாய தீமஹி
தன்னோ ஆச்லேஷ ப்ரசோதயாத்

## மகம்

ஓம் மஹா அனகாய வித்மஹே
பித்ரியா தேவாய தீமஹி
தன்னோ மகஃப்ரசோதயாத்

## பூரம்

ஓம் அரியம்நாய வித்மஹே
பசுதேஹாய தீமஹி
தன்னோ பூர்வபால்குநீ ப்ரசோதயாத்

## உத்திரம்

ஓம் மஹாபகாயை வித்மஹே
மஹாச்ரேஷ்டாயை தீமஹி
தன்னோ உத்ரபால்குநீ ப்ரசோதயாத்

## அஸ்தம்

ஓம் ப்ரயச்சதாயை வித்மஹே
ப்ரக்ருப்ணீதாயை தீமஹி
தன்னோ ஹஸ்தா ப்ரசோதயாத்

## சித்திரை

ஓம் மஹா த்வஷ்டாயை வித்மஹே
ப்ரஜாரூபாயை தீமஹி
தன்னோ சைத்ரா ப்ரசோதயாத்

## சுவாதி

ஓம் காமசாராயை வித்மஹே
மகாநிஷ்டாயை தீமஹி
தன்னோ சுவாதி ப்ரசோதயாத்

## விசாகம்

ஓம் இந்த்ராக்னௌச வித்மஹே
மஹாச்ரேஷ்ட்யைச தீமஹி
தன்னோ விசாகா ப்ரசோதயாத்

## அனுஷம்

ஓம் மித்ரதேயாயை வித்மஹே
மஹா மித்ராய தீமஹி
தன்னோ அனுராதா ப்ரசோதயாத்

## கேட்டை

ஓம் ஜயேஷ்டாயை வித்மஹே
மகா ஜய்ஷ்ட்யாயை தீமஹி
தன்னோ ஜ்யேஷ்டா ப்ரசோதயாத்

## மூலம்

ஓம் ப்ராஜாதிபாயை வித்மஹே
மஹப்ராஜையை தீமஹி
தன்னோ மூலாப் ப்ரசோதயாத்

## பூராடம்

ஓம் சமுத்ரகாமாயை வித்மஹே
மஹாபிஜிதாயை தீமஹி
தன்னோ பூர்வாஷாடா ப்ரசோதயாத்

## உத்திராடம்

ஓம் விஸ்வேதேவாய வித்மஹே
மஹா ஷாடாய தீமஹி
தன்னோ உத்ராஷாடா ப்ரசோதயாத்

## திருவோணம்

ஓம் மஹா ச்ரோணாய வித்மஹே
புண்யஸ்லோகாய தீமஹி
தன்னோ ச்ரோணா ப்ரசோதயாத்

## அவிட்டம்

ஓம் அக்ர நாதாய வித்மஹே
வஸூபரீதாய தீமஹி
தன்னோ சரவிஹ்டா ப்ரசோதயாத்

## சதயம்

ஓம் பேஷஜயா வித்மஹே
வருண தேஹா தீமஹி
தன்னோ சதபிஷக் ப்ரசோதயாத்

## பூரட்டாதி

ஓம் தேஜஸ்கராய வித்மஹே
அஜஏகபாதாய தீமஹி
தன்னோ பூர்வப்ரோஷ்டபத ப்ரசோதயாத்

## உத்திரட்டாதி

ஓம் அஹிர் புத்ந்யாய வித்மஹே
ப்ரதிஷ்டாபநாய தீமஹி
தன்னோ உத்ரப்ப்ரோஷ்டபத ப்ரசோதயாத்

## ரேவதி

ஓம் விச்வரூபாய வித்மஹே
பூஷ்ண தேஹாய தீமஹி
தன்னோ ரைய்வதி ப்ரசோதயாத்...


# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033

# இசக்கியம்மன்

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு தேவதைகள் இருப்பார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண் தெய்வங்களாக விளங்குவார்கள். அனைத்தையும் அரவணைக்கும் தன்மை பெண்களுக்கு உண்டு என்பதால், ஒரு இனத்திற்கோ, ஊருக்கோ தன்னலம் பாராமல் நன்மை செய்து, அதனால் ஏற்படும் கெடுபலனை தானே அனுபவித்து மறைந்த ஒவ்வொருவருக்கும் மரியாதை செய்யும் விதமாக அவர்களை தெய்வ பிறவியாகவே போற்றி வழிபாடு செய்து வந்தனர் நம் முன்னோர்கள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தெய்வம் குடிகொண்டுள்ளது என்ற ஆன்மிகத்தின் அடிப்படைத் தத்துவத்தை மெய்ப்பிக்கும் வகையில் நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்டவர்கள் தான் கிராம தேவதைகள்.

இதுபோன்ற தேவதைகள் மக்களோடு மக்களாக வாழ்ந்து மறைந்தவர்களாகவும் இருப்பார்கள். ஒருசில கிராம தேவதைகளே பல இனத்தவர்கள் தங்களது குல தெய்வமாகவும் ஏற்று வழிபாடு நடத்தியுள்ளனர்.

இதில் குறிப்பாக, இசக்கி அம்மன் என்பவள் ஒரு கிராம தேவதை.

முதலில் கிராம தேவதைகள் தம்மையும் தமது சக்தியையும் வெளிக் காட்ட கிராமமக்களை ஏதாவது ஒரு விதத்தில் பயமுறுத்துவார்களாம். பின்னர் அந்த கிராமமக்கள் யாராவது ஒருவரின் கனவில் அவர்கள் தோன்றி தான் இன்ன இடத்தில் புதைந்து உள்ளதாகவும், தன்னை வெளியில் எடுத்து வழிபட்டால் அந்த ஊரைக் காத்தபடி இருப்பேன் எனவும் கூறுவார்களாம். அதன்படி அந்த கிராம மக்கள் கனவில் வந்தபடியே அந்த தேவதைகளைக் கண்டறிந்து சிறு ஆலயம் எழுப்பி வழிபடுவார்கள். அந்த தேவதையும் அந்த ஊரைக் காத்தபடி ஊர் எல்லைகளில் அமர்ந்து இருப்பார்களாம்.

அப்படிப்பட்ட கதையின்படியே மாரியம்மனும் தன்னை வெளிக்காட்ட அம்மை நோயை உண்டாக்கி அதை குணப்படுத்த தன்னை வழிபட வைத்ததாக கிராமியக் கதைகள் உண்டு.

அப்படிப்பட்ட மாரியம்மன் அம்சத்தை சேர்ந்தவள் இசக்கி அம்மன் என்றாலும் ஒருவரது குடும்பத்தையும் குழந்தைகளையும் காத்தருளும் தெய்வமாக அவதரித்தவளே இசக்கி அம்மன்.

இந்த அம்மன் பெரும்பாலும் கன்யாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகாசி, சேலம் மற்றும் நாகர்கோவில் போன்ற தென் பகுதிகளில் அதிகம் ஆராதிக்கப்படுபவள். அவளுக்கு தனி ஆலயங்களும் உள்ளன.

இசக்கியம்மன் பொதுவாக சிவப்பு உடை உடுத்தி,கையில் ஒரு குழந்தையை ஏந்தியபடியே காட்சி தருகிறாள். அவள் கருணைஉள்ளம் கொண்டவள். அவள் ஆலயத்தை சுற்றி உள்ள பால்கள்ளு என்ற பெயரில்உள்ள சில செடிகளைக் கிள்ளினால் வெள்ளை



நிறத்தில் பால் போன்ற திரவம்வடியும். அதுவே அந்த இடங்களில் இசக்கி அம்மன் உள்ளாள் என்பதின் அடையாளம்என்று கூறுவார்கள். காரணம் குழந் தைகளுக்கு பால் ஊட்டி வளர்க்கும் ஒருதாயைப் போன்றவள் இசக்கி அம்மன் என்பதை அந்த சிறு செடி காட்டுகிறதாம்.

இசக்கி அம்மனை ரத்தத்தைக் குடிக்கும் நீலி என்ற யட்ஷினியின் சகோதரி என்றும் கூறப்படுகிறாள்.

நீலி என்பவள் காளியின் யுத்த தேவதைகளில் ஒருவள். காளியும் பார்வதியின் அவதாரமே என்பதினால் இசக்கியம்மனும் பார்வதியை சேர்ந்த ஒரு தேவதையே எனக் கருதுவதில் தவறில்லை. இசக்கி அம்மன் மானிட உருவு எடுத்து பூமிக்கு வந்தபோது அவளை வஞ்சித்து கொன்று விட்ட ஒருவனை பழி வாங்கும் விதத்தில் ஏழுஜென்மத்திலும் பிறப்பு எடுத்து தானே அவனை அழிக்க வேண்டும் எனசிவபெருமானிடம் வரம் கேட்டாள்.

அவள் கேட்ட வரத்தை தந்தாலும் ஒரு நிபந்தனைப் போட்டார் சிவபெருமான். ஒவ்வொரு ஜென்மத்திலும் அவள் தன்னைசந்தித்து தனது ஆசிகளைப் பெற்றுக் கொண்டப் பின்னர்தான் அவனை அழிக்கவேண்டும் என்பதே அந்த நிபந்தனை.

அதை அவள் ஏற்றுக் கொண்டாள். அடுத்த ஆறுஜென்மங்களிலும் அவளும், அந்த மனிதரும் பிறப்பு எடுத்தார்கள். அந்த ஆறு ஜென்மத்திலும் அவளே அவரை பல வழிகளில் கொன்று பழி தீர்த்தாள்.

இனி மிஞ்சி இருந்தது கடைசி ஏழாவது ஜென்மம். மீண்டும் இருவரும் பிறப்பு எடுத்தார்கள். இசக்கி அம்மன் சிவபெருமானை தேடிய வண்ணம்காட்டில் அலைந்து கொண்டு இருந்தாள். அப்போது ஒருநாள் அவள் காட்டு வழியேசென்று கொண்டு இருந்தபோது அவள் ஒரு சித்தரைக் கண்டாள். அந்த சித்தருக்குஅவள் மனிதப் பிறப்பு எடுத்து வந்துள்ளதின் காரணம் தெரியும் என்பதினால் அவளைசந்தித்தவர் அவளுக்கு சிவபெருமானும் பார்வதியும் இருந்த இடத்தைக் காட்டினார். அதன்படி இசக்கியம்மன் சிவசக்தியை அவர்கள் உட்கார்ந்து இடத்துக்குச் சென்றுபார்த்து தனக்கு வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொண்டாள். அப்போது பார்வதி அவளுக்கு துணையாக இருக்க நாகராஜரையும் அனுப்பி வைத்தாள்.

நாகராஜரும் இசக்கியம்மனும் காடு வழியே சென்று கொண்டு இருந்தபோது அந்த வழியே ஒருவன் சென்று கொண்டு இருந்ததைக் கண்டார்கள். அவனைப் பார்த்த நாகராஜர் இசக்கியம்மனிடம் அவன்தான் அந்த மனிதர் எனஅடையாளம் காட்டினார்.

ஆகவே இசக்கியம்மன் அந்த வழிப்போக்கரிடம் சென்றுதான் ஒரு வேலை தேடுவதாகவும் அவர் வீட்டு வேலை செய்ய தன்னை வைத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டாள். அந்த வழிப்போக்கனும் தனது மனைவி நிறைமாத கர்பிணியாக இருப்பதினால் அவளுக்கு உதவி செய்ய ஒரு பெண் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணியவாறு அவளை தன் வீட்டில்வேலைக்கு அமர்த்திக் கொண்டான். அவன் வீட்டில் வேலை செய்யத் துவங்கினாள் இசக்கியம்மன். ஒரு நாள் அவன் வெளியில் சென்றபோது அவனை நாகராஜரை அனுப்பி கொன்று விட்டாள்.

அந்த செட்டியாரின் மனைவிக்கு வந்துள்ள இசக்கியம்மன் ஒருபெண்ணாக இருக்காது, எதோ தெய்வமாகவே இருக்க வேண்டும் எனத் தோன்றியது. தன் கணவன் இறந்தப் பின் தானும் உயிர் வாழக் கூடாது என எண்ணியவள் இசக்கியம்மனிடம் தன் வயிற்றில் ஒரு குழந்தை வளர்கின்றது என்றும் அதைவெளியில் எடுத்து விட்டு தன் குடலையும் வெளியில் எடுத்து விட்டு தனக்கு மரணம் கிடைக்க அருளுமாறு கேட்டுக் கொண்டப் பின் மயங்கி விழுந்து விட்டாள். அவள் வேண்டுகோளை நிறைவேற்றி அந்தக் குழந்தையை வெளியில் எடுத்து தன்னிடம் வைத்துக் கொண்டு அவள்குடலை மாலையாக்கி தன் கழுத்தில் அணிந்து கொண்டாள்.

அவளே இசக்கியம்மன் என்ற பெயருடன் ஊரின் வடக்கு திசையில் ஆலமரத்தடியில் எழுந்தருளி தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றாள்.

– குமார், கன்னியாகுமரி.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com




# துர்க்கை

## அம்மனும் ஆயுதமும்

அனைத்து சிவாலயங்களிலும் துர்க்கை சன்னதி என்பது இருக்கு, சிவ ஆலயங்களில் உள்ள துர்க்கைக்கு சிவ துர்க்கை என்றும், பெருமாள் சன்னதியில் இருக்கும் துர்க்கைக்கு விஷ்ணு துர்க்கை என்றும் பெயர்.

துர்க்கை அம்மனின் கைகள் மற்றும் அதில் இருக்கும் ஆயுதங்கள் தான் முதலில் கவனத்திற்கு வரும்.

துர்க்கை அம்மனுக்கு இத்தனை கைகள் உள்ளதென்றும் அது எதனை குறிக்கிறது என்று அறிந்து கொண்டு துர்க்கையை வணங்குவது சிறப்பாகும்.

துர்க்கை கையில் இருக்கும் ஒவ்வொரு ஆயுதமும் பக்தர்களுக்கு ஒவ்வொரு செய்தியை சொல்வதாக அமைந்துள்ளது.

### வில்லும் அம்புகளும்

கடவுளின் கையில் இருக்கும் வில்லும் அம்புகளும் ஆற்றலை குறிக்கும். தன் கையில் வில்லையும் அம்புகளையும் ஏந்தி நிற்பதால், அண்ட சராசரத்தில் உள்ள அனைத்து ஆற்றல் சக்திகளையும் கட்டுப்படுத்துபவர் அவர் என்பதை அது குறிக்கும்.

### இடியேறு

கடவுளின் கையில் இருக்கும் இடியேறு அவரின் திடத்தை குறிக்கும். சவால்களை சந்திக்கும் போது இடியை மனதில் வைத்துக் கொண்டு சவால்களை சந்திக்க வேண்டும் என்று பக்தர்களுக்கு இது தூண்டுதலாக விளங்கும்.

### பாதி மலர்ந்த தாமரை

துர்க்கை அம்மன் கையில் இருக்கும் பாதியாக பூத்த தாமரை, வெற்றி நிரந்தரமல்ல என்பதை குறிக்கும். மேலும் சேருக்கு மத்தியில் தாமரை பூப்பதை போல், உலகத்தில் உள்ள பல சுகங்களுக்கு மத்தியில் மனித மனது ஆன்மீகத்தை நாட வேண்டும் என்பதையும் குறிக்கும்.

### வாள்

துர்க்கை அம்மன் கையில் இருக்கும் வாள் அறிவை குறிக்கிறது. அறிவே உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்ததாக விளங்குகிறது என்பதை குறிக்கிறது வாளின் பளபளப்பும் கூர்மையும். மேலும் அது துரு பிடிப்பதும் இல்லை என்பதையும் குறிக்கிறது.

### சுதர்சன் சக்ரா

உலகம் தன் கட்டுப்பாட்டின் கீழ் தான் இயங்குகிறது என்பதை கடவுளின் ஆள் காட்டி விரலில் அழகாக சுழலும் சக்கரம் குறிக்கிறது. தீய சக்திகளை அளிக்க துர்க்கை அம்மன் இந்த ஆயுதத்தை பயன்படுத்துவார்.

### திரிசூலம்

திரிசூலம் என்பது மூன்று அம்சங்களை குறிக்கும் சத்வா, ராஜாஸ் மற்றும் தாமாஸ். அமைதியையும் மோட்சத்தையும் அடைய ஒருவர் இந்த மூன்று அம்சங்களையும் சரிசமமாக கொண்டிருக்க வேண்டும்.

### அபாய முத்திரை

கடவுளின் ஒரு கை எப்போதும் தன் பக்தர்களை ஆசீர்வதிக்கும் அபாய முத்திரையை கொண்டிருக்கும். தன் பக்தர்களை பயத்திலிருந்து எப்போதும் காப்பதை இது குறிக்கும்.

# சிறந்த வாழ்க்கை

சிறந்த வாழ்க்கை என்று சொல்லும் பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறது. நாக்கின் நுனி மேல் அண்ணத்தில் பட்டு ழகரத்தைச் சொல்லும் பொழுது அப்பப்பா அந்த தமிழ்ச் சுவைக்கு ஈடு இணை ஏதுமில்லை. நீங்களும் ஒரு முறை "சிறந்த வாழ்க்கை" என்று சொல்லித் தான் பாருங்களேன், தற்காலிக சுகத்தை தமிழால் அனுபவித்து மகிழலாம். அதெல்லாம் சரித்தான் அதென்ன சிறந்த வாழ்க்கை? அப்பொழுது சிறப்பில்லாத வாழ்க்கை என்று ஒன்று இருக்கிறதா? என்று நீங்கள் தற்சமயம் சிந்தனைக் குதிரையைத் தட்டிப் பறக்க விட்டிருப்பீர்கள்.சரி, அதை இழுத்துப் பிடித்துக் கட்டி வையுங்கள், நேராக பொருட்சுவைக்குள் அமிழ்வோம்.

சிறந்த வாழ்க்கை என்பது இப்பொழுது நீங்களும் நானும் வாழ்ந்து கொண்டிருப்பது தான் என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?, வேறு வழியில்லையே நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும். இதே போலத் தான் சிறப்பில்லாத வாழ்க்கை என்பதையும் நாம் தான் வாழ்ந்து வருகிறோம் என்பதையும் சந்தேகத்திற்கு இடம் கொடுக்காமல் மூக்கின் மீது விரல் வைக்காமல் நீங்கள் நம்பித் தான் ஆகவேண்டும். அதெப்படி, குழப்பமாக இருக்கிறது என்கிறீர்களா? வாருங்கள் நம்மை நாமே ஆராய்வோம்.

சிறப்பான வாழ்க்கை என்பது மன மகிழ்வுடன் இருப்பது இவ்வளவு தான். சிறப்பில்லாதது என்பது நீங்கள் உங்கள் சிறப்பான வாழ்க்கையை ஏதோவொரு சிறு காரணத்தால் தள்ளிவைப்பது. சில நேரங்களில் நாம் கேள்விப்பட்டிருப்பது உண்டு, "உனக்கென்ன ராஜா வாழ்க்கை வாழுற! வாழ்ந்தா உன்ன மாதிரி வாழ்க்கை இருக்கனும்" என்று. ஆனால் நாம் என்ன வாழ்க்கை இதென்ற முடிவிற்கு வந்திருப்போம். இதே போல நாம் சில நேரங்களில் பிறர் வாழ்க்கையை மிகைப்படுத்தி அவர்கள் இடத்தில் நம்மை வைத்துப் பார்த்து பல முறை ஏங்கியதுண்டு. ஒன்றை மட்டும் நினைவிற் கொள்ளுங்கள் நீங்கள் வேண்டா விருப்பாக இருக்கும் இதே வாழ்க்கையைத் தான் இன்னொருவர் அற்புதம், மகத்துவம் என்றெல்லாம் சொல்கிறார். இது தான் வாழ்வின் சூட்சமமும்.

இப்படித்தான் நாம் நமது வாழ்க்கையின் அருமையே தெரியாமல் இருக்கும் மகிழ்ச்சியை அறவே தவிர்த்து, அருகில் இருப்பவருடன் இறுக்க மன நிலையைக் கையாண்டு எதையோ தேடிக்கொண்டு யாரைபோலவோ வாழவேண்டுமென்று சுயம் தொலைத்து துன்பத்தில் உழன்று உழன்று உங்கள் சிறப்பான வாழ்கையை சிறப்பில்லாத வாழ்க்கையாக அழகுற மாற்றிவிட்டு ஆபத்தைத் தேடிச் செல்கிறீர்கள். அதே போல ஒவ்வொருவருக்கும் அவரின் நிலைக்கேற்ப ஆசைகளும், வெறுப்புகளும், இருக்கிறது. இதை பட்டென்று சொல்லவேண்டும் என்றால் "வீட்டுக்கு வீடு வாசற்படி" என்று சுருங்கச் சொல்லிவிடலாம். ஆனால் பிறரைப் போல வாழவேண்டும் எனும்பொழுது அவர்கள் வாழ்வில் இருக்கும் துன்பத்தையும் சேர்த்தா நினைக்கிறோம்? இல்லைதானே! அதை நீங்கள் இப்பொழுதே உங்கள் வாழ்வில் செய்யலாமே!. உங்களைப் போல் நீங்கள் வாழ விழையுங்கள், துன்பத்தை தூக்கி எறியுங்கள். சிறப்பான வாழ்க்கை நீங்கள் வாழ்வதற்கு எவையெல்லாம் தடை என்று சிந்திக்க யாரும் உங்களுக்குச் சொல்லித் தரத்தேவையில்லை. ஏனென்றால் இதுவரையில் நீங்கள் அதை அழகாகச் செய்துள்ளீர்கள்.

தொகுப்பு:
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
மு.கிருஷ்ணா மோகன்
08526223399, 09843096462



www.aanmeegamalar.com

# பொறாமையால் ஏற்படும் தீமைகள்

கை, கால், காது, கண், நாக்கு, என, அனைத்து உறுப்புகளும் நன்றாக இருப்போர், அங்கஹீனம், காது கேளாமை, பேச்சு இழந்தோர், பார்வையற்றோர் ஆகியோரைப் பார்க்கும் போது, ஆண்டவா... எந்தக் குறையும் இல்லாமல் என்னைப் படைத்தாயே... என்று, இறைவனுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகிறோம். அதே சமயம், தெருவில், யாராவது சிரித்து பேசி செல்வதைப் பார்த்தால், சிரிப்பைப் பார்... சிரிப்பை! என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு... என்று, சிலருக்கு மனம் வெம்முகிறது.

அடுத்தவர்கள் சற்று மகிழ்ச்சியாக இருந்தால் கூட, இவர்களால் பொறுக்க முடிவதில்லை. இந்த பொறாமை குணத்தால் ஏற்படும் விளைவுகள் குறித்து, மகாபாரதத்தில் ஒரு கதை உள்ளது. திருதராஷ்டிரன் மனைவி காந்தாரி, நிறைமாத கர்ப்பிணியாக இருந்தாள். அவளுக்கு, அரண்மனை வாழ்வு, ஆள், அம்பு, சேனை, ராஜபோகம், பணிப்பெண்கள் என, அனைத்து வசதிகளும் இருந்தன. திருதராஷ்டிரன் தம்பியான பாண்டுவின் மனைவி குந்தியோ, காட்டில் ஒரு வசதியும் இல்லாத சூழலில் வசித்து வந்தாள். இந்நிலையில், குந்திதேவிக்கு, காந்தாரிக்கு முன்னரே, குழந்தை பிறந்து விட்டது. இச்செய்தி, நாட்டில் வாழ்ந்த காந்தாரிக்கு தெரிந்ததும், அவளுக்கு பொறுக்க முடியவில்லை. அவள் உள்ளத்தில் பொறாமைத் தீ, எரிமலை குழம்பாய் வெடித்து, வழிந்தது. அதன் விளைவாக, காந்தாரி, ஒரு அம்மி குழவியைக் எடுத்து, தன் வயிற்றில் இடித்துக் கொண்டாள். அவள் கரு சிதைந்து, ரத்தம் கலந்த சதை கூறுகளாக சிதறின.

வியாசர் அந்தச் சதை கூறுகளை, நூற்றியொரு குடங்களில் இட, துரியோதனன் முதலான நூறு பேர்களும், துச்சலை என்ற ஒரு பெண்ணும் உருவாயினர். காந்தாரியின் இத்தகைய பொறாமை குணத்தின் காரணமாகவே, கவுரவர்களும் இயல்பிலேயே பொறாமை குணம் படைத்தோராக விளங்கி, பாண்டவர்களின் மேல் கொண்ட பொறாமையால் அழிந்தனர். நாம் யாரைக் கண்டு பொறாமைப்படுகிறோமோ, அவர்களுக்கு ஒன்றும் நேராது; பொறாமைப்பட்ட நமக்குத்தான் கேடு விளையும். எனவே, பொறாமையை மனதிலிருந்து துரத்தி, நற்சிந்தனைகளை மனதில் வளர்த்துக் கொள்ளுங்கள். நடப்பவை, நல்லனதாகவே அமையும்.

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# இறைவன் கர்மவினையிலிருந்து விடுபட்டிருந்தால், நாம் ஏன் விடுபட்டிருக்கவில்லை?

"கர்ம வினை என்பது முன்வினைகளின் பலன்கள் நல்ல மற்றும் தீய விளைவுகள் ஆகும். நீங்கள் விஷத்தை விழுங்கினால் உங்கள் செயல் இறப்பு எனும் தீய பலனை விளைவிக்கிறது. நீங்கள் உடலுக்கு உகந்த உணவை உண்டால் உங்கள் செயல் மேம்பட்ட உடல் நலம் என்ற நல்ல பலனை விளைவிக்கிறது. இன்று நான் முக்கியமாக நமக்கு வேதனையையும் துன்பத்தையும் தருவிக்கும் தீயகர்மவினையைப்பற்றிப் பேசுகிறேன். சாத்திரங்கள் உரைப்பதுபோல் நாம் இறைவனது சாயலில் படைக்கப்பட்டிருந்தால், இறைவன் கர்மவினை துன்பங்களிலிருந்து விடுபட்டிருந்தால், ஏன் நாமும் விடுபட்டிருக்கவில்லை?

இறைவன் கொடுத்த சுதந்திரவிருப்பாற்றலை தவறாகப் பயன்படுத்தியதன் விளைவே தீய கர்மவினை. விலங்குகள் தனிப்பட்ட கர்ம வினையிலிருந்து விடுபட்டுள்ளன. அவற்றால் தீமை செய்ய இயலாது.அவை பகுத்தறியும் ஆற்றல் அற்றவை. அவற்றின் வாழ்க்கை அக உந்துணர்வு மற்றும் அவற்றின் சூழ்நிலை விளைவுகளாகிய கூட்டுக் கர்ம வினை ஆகியவற்றால் ஆளப்படுகிறது. அவற்றின் நடத்தை சுயதீர்மானமின்றி அக உந்துதலின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அதற்காக அவை தண்டிக்கப்படுவதில்லை. ஆதலால் மனிதர்களைப்போன்று விலங்குகள் அவற்றின் செயல்களின் விளைவுகளால் துன்பப்படுவதில்லை. மனிதன் எல்லா செயல்களையும் தேர்ந்தெடுப்பதற்காக பகுத்தறிவு எனும் கொடையைப் பெற்றுள்ளான். அவற்றிற்கான பொறுப்பாளியாகிறான்.

எனவே இறைவன் நிரந்தரமாக செயல்களின் விளைவுகளிலிருந்து ஏன் விடுபட்டுள்ளான்; நாம் ஏன் இல்லை? இறைவன் நிரந்தர இருப்பு.நிரந்தர உணர்வு நிலை. நிரந்தர பேரானந்தம் என்று கூறப்படுகிறான். அதனால் அவன் ஒருபோதும் துயருற்றதில்லை. பின்னர் ஏன் நமக்கு துயரங்களை திட்டமிட்டான்?இது வினோதமாக இல்லையா?நான் இதற்கான விடையை அறிவேன். ஆனாலும் நான் அவனுடன் வாதிடுகிறேன். "இறைவா !நீ இந்த சிறிய விளையாட்டு உலகைப் படைக்க விரும்பியிருந்தாலும் ஏன் துயரத்தை அதில் ஒரு பகுதியாகச் செய்தாய்? உனக்கு விளையாட்டாக இருப்பது எங்களுக்கு மரணமாக இருக்கின்றது. நீ இவ்வுலகை அழகிய மலர்களுடனும், களைச் செடிகள் இன்றியும் கூட்டுக்கர்மவினை இன்றியும் ஏன் படைக்கவில்லை. இறைவா! நீ மாயை இல்லாத ஓர் உலகை ஏன் படைக்கவில்லை!"



இறைவன் மாயையைப் படைத்தான் என்ற உண்மை நம்மை அவநம்பிக்கையாளர்களாக ஆக்கக்கூடாது.

துன்பம் மூன்று காரணங்களைக் கொண்டுள்ளது

துன்பம் ஆன்மாவின் மிகப்பெரிய சாபம். அது துயருறுபவர்களுக்கு அச்சமூட்டுகிறது. இப்பொழுது நீங்கள் நன்றாக இருந்தாலும் ஒரு நாள் பாதிக்கப்பட்டவராக இருக்கமாட்டீர்கள் என்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்? மனிதனின் துயரங்களுக்குப் பின்னால் மூன்று காரணிகள் உள்ளன. முதலாவதாக வருவது மாயை; இரண்டாவது மனிதனின் சொந்தத் தவறான செயல்களின் விளைவுகள் மற்றும் மூன்றாவதாக ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டபோது நல்ல மற்றும் கெட்ட தனிநபர்கள் அனைவரும் அழிக்கப்பட்டதைப் போன்ற கூட்டுக்கர்மவினையின் விளைவுகள். மகிழ்ச்சிக்காகஉடல் ரீதியான வசதியின்மீது அதிகமாகச் சார்ந்திருக்க நீங்கள் கற்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

அனைத்து வகையான வசதிகளுக்குரிய ஆசைதான் துன்பத்தின் முக்கிய மூலமாக இருக் கிறது. இதனால்தான் நாம் எதனுடனும் பற்றுகொண் டிருக்கக்கூடாது என மகான்கள் கூறுகின்றனர். காலுடைந்த ஓர் அன்னியரைப் பார்த்ததும் "எவ்வளவு துரதிர்ஷ்டமானது !" என நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் அவர் மீது இரக்கத்தை உணர்கிறீர்கள். ஆனால் அவரது காயத்தின் வலியிலிருந்து தொடர்பற்றிருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் காலை உடைத்துக் கொண்டிருந்தால், வலியால் அவதிப் பட்டுக்கொண்டிருப்பீர்கள். இதைப்போன்றே அண்டை வீட்டாரின் குழந்தை கொல்லப்பட்டதை காண்கின்ற ஒரு தாய் அதுதனது சொந்த குழந்தையாக இருந்திருந்தால் அவள் அடைந்திருக்கக்கூடிய அளவு துக்கத்தை உணர்வதில்லை. நீங்கள் வேறொருவருடைய உடலைக்காட்டிலும் உங்களுடைய உடலுடன் மிக நெருக்கமாக உங்களை அடையாளப் படுத்திக் கொள்கிறீர்கள்."

துன்பங்கள் அனைத்தும் இறைவனின் அருளாசிகளே! என்ற எமது கருத்தினை வாசகர்களுக்கு மிகவும் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன். நம் துன்பங்கள் அனைத் திற்கும் சொந்தக்காரர்கள் நாமேதான். என்றைக்கானாலும் நாம் அவற்றைச் சந்தித்துத்தான் தீரவேண்டும். துன்பங்கள் நோயாகவோ வறுமையாகவோ அல்லது வேறு எவ்வகையானதாகவும் இருக்கலாம். இப்பிறவியில் செய்யும் வினைகளின் பயனை அடுத்த பிறவியிலும் முற்பிறவியில் செய்தது இப்பிறவியிலும் அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறோம். நல்வினையானாலும் தீவினையானாலும் அதன் விளைவை அறுவடை செய்ய பூமிக்கு பிறப்பெடுத்து வந்தாக வேண்டும்.நாம் எதைச் செய்தாலும் பலனை எதிர்பாராமல் செய்வதும், செய்யும் கர்மங்கள் அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்வதுமாக இருக்க வேண்டும். "நன்மையோ தீமையோ எதுவாகயிருந்தாலும் எல்லாம் உனக்காகவே செய்கிறேன்; எல்லாம் உனக்கே சொந்தம். எதுவும் எனக்குச் சொந்தமில்லை இறைவா! இந்த பிரபஞ்சம் நீயேதான்; பிரபஞ்சமாகின்ற குகையில் உன் சப்தம் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. உன் அன்புக் குழந் தைகளை நீ அழைத்துக் கொண் டிருக்கின்றாய்! அதுவே அந்த எதிரொலியின் பொருள். உன் அருளாசியாகின்ற மழை பிரபஞ்ச குகையிலிருக்கும் உன் குழந்தைகள் மேல் பொழிந்து

39
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
**“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”**
**aanmeegamalar.com**
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்





கொண்டிருக்கிறது. அனைத்துலகையும் காத்து ரட்சிக்கின்ற உன் கரங்கள்தான் இந்தப்பிரபஞ்சம். பிரபஞ்சம் முழுவதும் நீ நிறைந்துள்ளாய்! அவ்வாறிருக்கின்ற உன்னிடத்தில் ‘நான் அனைத்தையும் சமர்ப்பணம் செய்கின்றேன்’ என்று எண்ணியவாறு ஒவ்வொருவரும் வாழவேண்டும். அதனால் நாம் பலனை எதிர்பாராமல் செய்கின்றவை அனைத்தும் இறைவனைச் சென்றடைவது மட்டுமின்றி அவற்றைச் செய்கின்றவர்களும் அவனைச் சென்றடைகின்றனர். அதனால் அவர்களுக்கு பிறப்பு இறப்புகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வாய்ப்பினை இறைவன் மனமிரங்கி அருளுகிறான்.

அதற்குமேல், ஒழுக்கம் நேர்மை போன்ற குணங்களை ஒருவன் கைவரப்பெற்றிருக்கவேண்டும். மனிதனின் அடிப்படை குணங்களான பயமின்மை, பிற உயிர்களை நேசித்தல், பிறருக்கு சேவைபுரிதல் போன்றவை ஒருவனிடமிருந்தால் அவற்றை வளரச்செய்து இறைவனிடத்தில் மனதைக் குவிக்கவும் அவனிடத்தில் நிபந்தனையற்ற அன்பைச் செலுத்தவும் இறைவன் உதவுவான். அது வளர்ந்து இறைவனைத் தேடவைக்கும் பேரார்வத்தையும் தீவிர ஏக்கத்தையும் பக்தனுக்கு ஏற்படுத்துவான். அப்பொழுது அவனுக்கு இறைவனிடத்தில் நெருக்கம் அதிகரிக்கிறது.

இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் இறைபக்தனுக்கு ஏற்பட்ட துன்பங்கள் மட்டும்தான். துன்பங்கள் அவனை மேலோங்கச் செய்கிறது. ஒருமுறை ஒரு துன்பம் ஏற்பட்டு முடிவடையும் இடைப்பட்ட காலத்தில் அவன் இறைவனை நினைப்பான்.அத்துன்பம் முடிவடைந்த பின்னர் சிறிது நாட்கள் ஸம்சார வாழ்க்கையில் சிறிதளவு சந்தோஷமாக இருப்பான். உடனே வேறு ஒரு துன்பம் ஏற்பட்டு அவனுடைய சந்தோஷத்தைக் கெடுக்கிறது.அப்பொழுதும் அவன் இறைவனை நினைத்து அழுவான்.இந்தத் துன்பங்கள் எவ்வாறு வருகிறது என்றால் அது மாயையின் ஆதிக்கத்தால் ஏற்படுகின்ற அவனுடைய கர்மாவால் விளைவதேயாகும். ஒருவனின் கர்மா முழுமையாக முடிவடைந்தால் மட்டும்தான் இறைவனை அடைய முடியும்.அவை இறைவனால் கொடுப்பதாகும். ஓர் உண்மையான இறைபக்தன் இளவயதிலேயே இறைவனை நேசிப்பவனும் அவனுடைய குறிக்கோள் ‘இறைவனு’மாக இருந்தால் அது அவனுடைய முற்பிறவியின் தொடர்ச்சியாகும்.பின்னர் அவனுக்குத் துன்பங்கள் அடிக்கடி ஏற்படத் தொடங்கும். அதன் பின்னர் துன்பங்கள் தொடரும். ஏனென்றால் அவனுக்கு இறைவனை அடைவது குறிக்கோள் என்றால், தன் பக்தனை தன்னுடன் சேர்த்துக்கொள்வதே இறைவனின்நோக்கமாகும். ஏனென்றால் ஓர் உண்மையான இறைபக்தன் தன் முற்பிறவி தொடர்ச்சியாக இளவயதிலேயே இறைவனை நேசிப்பவனும் அவனுடைய குறிக்கோள் இறைவனுமாக இருந்தால், அவனுக்குத் துன்பங்களை விரைவில் அனுபவித்து முடிக்கும்பொருட்டு அடிக்கடி இறைவன் அருளிக்கொண்டிருப்பான். பின்னர் தொடர்ந்து சோதனைகளைக் கொடுத்துக்கொண்டிருப்பான்.அதனால் அவன் அடிக்கடி இறைவனை நினைத்துக்கொண்டே இருப்பதால் எப்பொழுதும் அவன் இறைவனுடனேயே இருப்பான்.

அதற்கான ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். குழந்தையை பெற்றெடுக்கப் போகின்ற ஒரு பெண்ணுக்கு பிரசவ வலி முதலில் ஒரு மணிநேரத்திற்கு ஒரு முறை வரும் என்று வைத்துக்கொள்வோம். பின்னர் அரை மணிநேரத்திற்கு ஒரு முறை வரும். அதன் பின்னர் பத்து நிமிடத்திற்கு ஒரு முறை வரும். பின்னர் தொடர்ந்து அந்த வலி வரும். சிலருக்கு இவ்வாறு வலி வரும். வேறு சிலருக்கு வேறுவிதமாகவும் வரும்.இவ்வாறு தொடர்ந்து வந்தால் தான் குழந்தை பிறக்க நேரும். அதுபோன்று ஓர் உண்மையான இறைபக்தனின் துன்பங்களாகின்ற வலி, குழந்தை பெறப்போகும் பெண்ணிற்கு ஏற்படும் பிரசவ வலியைப் போன்றுள்ளதாகும். அந்த வலியைத் தாங்கிக்கொண்டு அவள் குழந்தை பெறுவதுபோன்று, பக்தன் தன் துன்பங்களை தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.அவ்வளவு கடினமான பிரசவவலியை தாங்குவதால் அவள் இறைவனின் பிரதிபிம்பமாகின்றஓர்அழகான குழந்தையை பெற்றெடுப்பாள். அது போலவே நம் துன்பங்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டால் ஆனந்தமயமான, அமைதியான, அழகான, என்றும் உள்ள, எங்கும் நிறைந்துள்ள, ஒளிமயமான இறைவனை கண்டு அடையலாம்.கர்மா எல்லாம் முடிந்தால் மட்டும்தான் இறைவனைக் காணவும், அடையவும் முடியும்.

ஒருவன் இறைவனைக் காணும்படியான, அவனை கண்டு அடையும்படியான பெரும் பேற்றை பெறுவதற்குக் காரணமாக இருப்பது. அவனுடைய துன்பங்கள்தான்.அதனால் துன்பங்களை ‘துன்பங்கள்’ என்று கூறுவது நியாயமற்றதும் அர்த்தமற்றதுமாகும். அவை இறைவனின் அருளாசியேயாகும். ஒருவன் தொடர்ந்து துன்பங்களை அனுபவிக்கிறான் என்றால் அது இறைப்பேறு பெற்று அவனை அடைவதற்காக மட்டும் உள்ள மகத்தான பாதையை இறைவனே காட்டுகிறான் என்பதையும் அறியவேண்டும். துன்பம் என்றால் உடல்ரீதியாக (கொடிய நோயினால் அவதிப்படுவது) இருக்கலாம், மனரீதியாகவும் (மனத்துயரம்) இருக்கலாம். ஆத்மரீதியாகவும் (இறைவனை அறியவும் காணவும் அடையவும் முடியவில்லையே என்ற தீவிர ஏக்கம்) இருக்கலாம்.இவை மற்றவர்களாலும் வரலாம். உடனிருப்பவர்களாலும் வரலாம். இவர்களால் துன்பங்களை ஒருவன் அனுபவிக்கின்றான் என்றால் அவற்றை சாதாரணமாக எண்ணக்கூடாது. சில சமயங்களில் உறவுகள், மனம், வாக்கு, செயல் இவற்றால் தொட்டாலே நம் இதயத்தையும் உடலையும் வெட்டி கூறுபோடுகின்ற கத்திகளாக மாறுகின்றனர். அவ்வாறு கத்திகளாக மாற்றுவது யார்? எதற்காக மாற்றுகிறது? இறைவன்தான் கத்திகளாக மாற்றுகின்றான். துன்பங்களை அனுபவிக்கின்ற தன் பக்தனை தன்னிடத்தில் சேர்ப்பதற்காகத்தான். இறைவன் எப்படி வேண்டுமானாலும் செய்வான். தன்பக்தனின் குறிக்கோளை அறிந்துகொண்ட இறைவன் எப்படியாகிலும் பக்தனை தன்னுடன் சேர்த்துக்கொள்வான்.



அவமானம், அவமதிப்பு, அவதூர் வார்த்தைகள் போன்றவற்றை, தன் மற்ற குழந்தைகளை வைத்துத் தன்னுடைய பக்தன்மேல் மழையாகப் பொழிவான். இவ்வாறு எல்லா துன்பங்களையும் சந்திக்கவைத்து, இறுதியில் பக்தனின் மனதில் படர்ந்துள்ள தேவையற்றதும் பயனற்றதுமான காட்டுக்களைகளை வைராக்கியம் எனும் கோடாலியால் வெட்டி சுத்தப்படுத்தி மனமெனும் மண்ணில் நம்பிக்கையெனும் உரமிட்டு இறை ஏக்கம் அல்லது இறை பேராவல் எனும் மகோன்னதமான செடியை நட்டு விசுவாசமெனும் தூய்மையான நீரை பாய்ச்சி வளர்க்கச்செய்து இறைஅனுபூதியெனும் நறுமணமுடைய இறைவனாகின்ற மலர்களை பக்தனுக்கு இறைவனே அருளுவான். அனைத்திற்கும் காரணமாக இருப்பது இறைவன் மட்டும்தான்.

அதுவரையிலும் நம் பின்னால் இருந்துகொண்டும் நம் உறவுகள் பின்னால் இருந்துகொண்டும் அவர்களை இயக்கிச் செயல்படுத்தப்படுவதும் இறைவனேயாவான். பெரும்பாலும் வருடத்தில் 365 நாட்களும் நம்முடன் இருப்பவர்களை வைத்துதான் இறைவன் தன் திட்டத்தை அமல்படுத்துவான்; நல்லமுறையில் முடிப்பான்.அனைத்தையும் செய்யவைப்பது அன்பிற்குரிய, பாசத்திற்குரிய ஆனந்தமயமான இறைவனேயாவான். பின்னர் தன் பக்தனுக்கு தூண்டுகோலாயிருந்தவர்களையும் இறைவன் ஆசீர்வதித்து தன்னுடன் சேர்த்துக் கொள்வான். “இவ்வளவு விபரீதமாக நடந்து கொண்டவர்களுக்கும் இறைவனருள் கிடைத்துவிட்டதா” என்று நினைக்கத்தோன்றும். ஏனென்றால், அதை அவர்கள் செய்யவில்லை. அவர்களை இறைவன் தன் கருவிகளாக மாற்றி தன் திட்டத்தை அவர்கள் மூலமாக இறைவனே நிறைவேற்றுகின்றான். எனவே செய்யவைப்பதெல்லாம் இறைவனே!.இதுபோன்று இன்றைய உலகத்தின் அனைத்து அசைவுகள் மற்றும் நிகழ்வுகளின் இயக்குநர் இறைவனேதான். அனைத்திற்கும் ‘கர்த்தா’ இறைவனே! ஆனால் பார்ப்பவர்களுக்கு அனைத்தும் மனிதன் செய்வதைப்போன்று தெரிகின்றன. இந்த உண்மையான இரகசியத்தை அனைவரும் அறிந்துகொண்டால் உலகத்தில் அமைதி நிலவும்.அப்பொழுது துன்பங்களும் குறையும்.துன்பங்கள் இறைவனின் அருளாசியே என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

# சிவாலயம் எழுப்பினால் கிடைக்கும் பலன்கள்

❖ யாரொருவர் சிவபெருமானுக்கு ஆலயம் எழுப்புகிறாறோ அவர் தினந்தோறும் அப்பெருமானைப் பூஜித்தால் உண்டாகும் பலனை அடைகிறான். அது மட்டுமல்ல அவன் குலத்தில் சிறந்த முன்னோர்களில் நூறு தலைமுறையினர் சிவலோகம் செல்வார்கள்.

❖ பெரிதாக இருந்தாலும் சரி, சிறியதாக இருந்தாலும் சரி, ஒருவன் மனத்தால் ஆலயம் எழுப்ப வேண்டும் என நினைத்தாலே அவன் ஏழு ஜன்மங்களில் செய்த பாபங்களினின்று விடுபடுவான். அவன் ஆலயம் கட்டி முடித்தானாகில் சகலமான போகங்களையும் அடைவான்.

❖ கருங்கற்களைக் கொண்டு ஆலயம் எழுப்புவானாகில், அக்கற்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஆயிரம் வருஷம் சிவலோகத்தில் இருக்கும் பாக்கியத்தைப் பெறுவான்.

❖ சிவலிங்கத்தைச் செய்விப்பவன் சிவ லோகத்தில் அறுபதினாயிரம் வருஷம் இருப்பான். அவன் வமிசத்தவரும் சிவலோகத்தை அடையும் பலனைப் பெறுவார்கள்.

❖ சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ய எண்ணியவன் எட்டுத் தலைமுறைக்கு இறந்த தன் முன்னோர்களைத் தன்னுடன் சிவ லோகத்தை அடையச் செய்வான்.

❖ ஒருவனால் செய்ய முடியவில்லை யென்றாலும், பிறர் செய்ததைக் கண்டு, நாமும் செய்திருந்தால் நற்கதி அடையலாமே என்று நினைத்தாலே போதும், அவன் முக்தி அடைவா னாம்.

❖ பிரம்மதேவன், யமதர்மனுக்குப் பாசமும் தண்டமும் கொடுத்துப் பாபம் செய்பவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அளித்தபோது சிவபக்தர்களை அண்டக் கூடாது என எச்சரித் திருக்கிறார்.



❖ எந்த நேரமும் சிவபெருமானையே மனத்தால் தியானித்து வருபவர்கள், பகவானை மலர்களால் அர்ச்சிப்பவர்கள், நித்திய வழிபாடுகளைச் செய்விப்பவர்கள், காலையும் மாலையும் ஆலயத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்பவர்கள், சிவாலயத்தை நிர்மாணிப்பவர்கள், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்பவர்கள் ஆகியோரிடம் நெருங்கக் கூடாது என எச்சரித்துள்ளார். அவர்கள் வம்சத்தவர்கள் கூட யமதூதர்களால் நெருங்கப் படாதவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

❖ முக்கியமான விஷயம் சிதிலமாகிக்கிடக்கும் சிவாலயத்தைப் புதுப்பித்து திருப்பணிகள் செய்வது, செய்பவர்களுக்கு உதவுவதும் 21 தலைமுறைகள் செய்த பாவம் தீரும்.

❖ எந்த ஒரு சிவாலயம் சிதிலமாகி இருக்கிறதோ, அங்கு ஈசன் தியானத்தில் இருப்பார் என்றும் அங்கு அவ்வளவு எளிதில் சித்தர்கள் கூட நெருங்க முடியாது என்கிறார்கள்.... அப்படிப்பட்ட சிதிலமாகி இருக்கும் கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்பவருக்கு அந்த ஈசன் தியானம் செய்த பலன்கள் அவர்களுக்கு கிடைக்குமாம்.... அவர்கள் இருக்கும் இடத்தில் ஏதேனும் ஒரு தெய்வம் அவர்கள் அருகில் இருந்து அவர்களை பாதுகாக்கும் என்கிறார்கள்... இவர்களுக்கு உதவி செய்வது அந்த ஈசனுக்கே செய்கின்ற உதவி என்றும் கூறப்படுகிறது.....

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033





# கடவுளின் பிரதிபலிப்பு

பிம்பங்கள் பிரதிபலிக்கும் – அது கணக்கு. இப்போது நான் படித்திருக்கிறேனா, படிக்கவில்லையோ, பிரதிபலிப்போன். 166 வருடம் முன் ‘ஏழுகிணறு’ என்ற இடத்தில் ‘இராமலிங்க சுவாமிகள் ’ பிரதிபலித்தார். ‘பிரதிபலிப்பு’ என்பது கணக்கு. இந்தக் குறிப்புகள் எப்படி தெரிகின்றன? தோன்றுகின்றன?

தோன்றியவுடன் நம் கவனத்தை ஈர்ப்பது ‘குறிப்பு’. மேஜையின் மேல் மூக்குக் கண்ணாடி கவனத்தை ஈர்க்கும். அதுபோல, ‘சத்பாத்திரங்கள்’ யார்? பகவானைப் பற்றி யாராவது சொன்னால், வாங்கி வைத்துக் கொள்வது அனைத்தையும்.



‘பொம்மையைப் போடுங்கள்’ ஆங்கிலத்தில் ட்ரா பண்ணி / பேப்பரில் போட்டால், அறுத்து விட்டது போல் இரண்டு கோடு.. அப்பால் / இப்பால் ஒரு பாகம். நடுவில் கோடு. அறுவை சிகிக்சையில் அறுக்கிறார்கள்.

அம்பாள் என்ன சொல்கிறாள்? சாக்பீஸ் கொடுத்து பூமியில் தரைவழியாக நேரே போக வேண்டும். நேர்கோடு நேராகப் போட்டால், எவ்வளவு நீளம். அதற்கு கம்பீரம் என்று பெயர். கம்பீரானந்தர். மத்யஸ்தானம் / பிந்து ஸ்தானம் பிடித்து புள்ளிவை. பெரிய கோட்டை, காம்பஸ் வைத்து வரைந்தால், வட்டம் ஏற்படும். பூமியை சக்கரத்தில் தான் பார்க்க முடியும். சக்கரம் இல்லாமல் ஒன்றும் கிடையாது. பூமியைப் பார்க்க வேண்டும் என்றால் மூன்று வேண்டும். வட்டம் (சர்க்கிள்). அதன் கம்பிரத்தை வைத்து பாதியை, மீதீ பாதியை அளக்கலாம். மேசை 2.¼ அடி நீளம், 1.¾ அகலம் – நீண்ட சதுரம். எவ்வளவு வேணும்? மஞ்சள் மரத்தில் போடலாமா? தேக்கு மரத்தில் போடலாமா? ரோஸ் வுட் ஆ? இவை விவரங்கள்.

நேர்க்கோடு. சமஸ்கிருதத்தில் கம்பீரம் ஏன்? இது வட்டத்தை எளிதாகப் பிரிக்கும்; பிரிக்கலாம். இதை நேராகப் போட்டால் ‘தீரம்’. ஒரு கணக்கு. ஸ்ரீசக்கரத்தில் இருக்கிறது. இரண்டும் போட்டால் கோணம் வரும். ஒரு கோடு – மத்தியில் கோடு. ‘கோட் ஸ்டேன்டு’ மாதிரி – சட்டம் ஒரு டிசைன்.

இதனுடைய கம்பீரம் தெரிந்து கொள்ளுங்கள். எவ்வளவு இடத்தை அளந்து, சாய்வாக கோடு சேர்த்தால் செங்கோணம், ஸ்லான்ட்டிங் ஆக போடு! ‘சாய்வு’ என்பது கணக்கு. கீழே நேர்கோடு இல்லாவிட்டால் கூட, உலகில் கோணம் உண்டாகிவிடும் என்று அர்த்தம். சாய்வு ஆக இரண்டு கோடு போட்டு இணைத்தால், செங்கோண முக்கோணம்.

ஆறு கால பூஜை – அறு கோண முக்கோணங்கள். ஓஷட் – 96. ஷட் – 6. த்ரிஷட் – 36, பஞ்சாஷட் – 56. இத்தனை கோணங்கள் , விதவிதமான கோணங்கள். சின்ன பல் மாதிரி இருக்கும்: இரும்பு பல் சக்கரம் செய்தீர்கள். டிசைன் போட்டு, வேறு ஏதாவது பொறுத்தியில் வைத்து, விசையை வைத்துக் சுற்றினால், குறிப்பிட்ட வட்டத்தில் நெருப்பினை வெளிக்கொண்டு வருகிறது.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

## ஞானிகளின் பொன்மொழிகள்...

- ❖ கடவுளை தெரிந்து கொள்ள விருப்பம் இருந்தால் குரு கிடைத்துவிடுவார்.
- ❖ நேசம் என்பது அற்புதமான கொள்கை. அறிவு என்பது நேசத்தைப் பற்றி அற்புதமாக எடுத்துச் சொல்லும். ஆனால் நேசத்தை அறிவு அனுபவிக்காது.
- ❖ காசு இருப்பதனால் தான் மனிதன் உலகை நேசிக்கிறான்.
- ❖ பூஜை செய்து பக்தியையும், பக்தி செய்து ஞானத்தையும் பெற முடியும்.
- ❖ மாயை என்பது வெற்றிக்கு போடும் முட்டுக்கட்டை.
- ❖ வினைக்கு காரணம் தெரிந்தால் ஞானம் வரும்.
- ❖ மனம் என்ற உறுப்புக்கு கடவுளைப் பார்க்கும் திறமை உள்ளது.
- ❖ நமது எழுத்துக்கள் எதிர்காலத்தையும், சில பல மனிதர்களையும் பாழ்படுத்தினால் அது எழுத்தாளனுக்கு கிடைக்கின்ற பாபம்.
- ❖ ஒரு தரம் சாப்பிட்டால் போதும் என்று எவராவது திருப்தி கொள்வாரா? தினம் தினம் சாப்பிடுகிற மாதிரி மறுபடியும் மறுபடியும் இறைவனை நினை.
- ❖ அருள் பிறந்ததற்கு அனுபவம் காட்ட வேண்டும் என்றால் பகவானை நினைப்பவர்கள் கருத்துக்களை வித்துக்களால் பிறப்பிப்பார்கள்.
- ❖ குணத்தினால் மட்டுமே உலகம் வளர்ச்சி அடைகிறது.
- ❖ இறைவனைப் பற்றி பேசுவதும், இறைவனைத் துதிப்பதும் இப்படித்தான் இறையருளை பெறுவதற்கு மனதை கொடுக்க வேண்டும்.
- ❖ பூ உலகம் பொன்னானது. சொற்கள் மென்மையானது. மனம் இனிமையானது. நட்பு உறுதியானது. நாடு வெற்றியானது.

# பத்திரகாளியின் பிள்ளைகள்



## வீரபத்திரன்

சிவனின் வியர்வைத்துளியில் பிறந்த வீரபத்திரன், பத்திரகாளி அம்மனின் போர்ப்படை தளபதி ஆவார். பத்து தலை, இருபது கையினை உடையவர். சிவனால் உருவாக்கப்பட்டு, அம்மனுக்காக கொடுக்கப்பட்டவர்.

## வேதாளை பூதத்தான்...

தேவர்கள் அமுதம் கடையும் போது, எட்டாவது நாள் பிறந்தவன் கட்டழகன் வேதாளை. அவனது உருவம் ராட்சசன் போல இருந்ததால் அவனை தேவர்கள் காட்டானை பர்வாதம் என்னும் வனத்தில் கட்டி வைத்தனர். பத்திரகாளி அம்மன் தாருகனை வதம் செய்ய பூதப்படைகளுடன் கிளம்பும் போது, கடல் தடையாக இருந்தது. கடல் கடந்து போக அவர்களுக்கு ஒரு பாலம் தேவைப்பட்டது, எனவே வேதாளையை வரவழைத்து அதன் நாக்கால் பாலமிட்டு, தாருகன் கோட்டை பத்திரகாளி தன் படையுடன் சென்றார். தனக்கு உதவிய வேதாளையை தன் மகனாக ஏற்றுக் கொண்டார்.

## வண்டி மலையன்

தாருகன் சிவபெருமானிடம் ஒரு வரம் வாங்கியிருந்தான். அதன்படி அவனது இரத்தம் ஒருதுளி நிலத்தில் விழுந்தால் அதிலிருந்து 9 அசுரர்கள் தோன்ற வேண்டும் என்பது ஆகும். பத்திரகாளி அம்மன் தாருகனை, வேதாளையின் நாக்கில் வைத்து கொன்று, அவனுடைய இரத்தம் நிலத்தில் சிந்தாதபடி ஒரு வண்டியில் கட்டி புட்டாபுரத்திற்கு பயணப்படும்போது, வண்டியில் இருந்து ஒருதுளி இரத்தம் கீழே இருக்கும் நாக்கு பாலத்தில் சிந்தியது. அதிலிருந்து மலை போன்ற உருவத்தில் ஒரு அசுரன் தோன்றினான். அம்மன் அவனை தன் மகனாக ஏற்றுக்கொண்டு வண்டிமலையன் என்று பெயரிட்டாள்.

**கோவில்களில் பத்திரகாளி அம்மனின் பீடத்திற்கு எதிரில் 4 படையல்கள் போடப்படும். அந்த 4 படையல்களும் அம்மனின் 4 பிள்ளைகளுக்கு உரியது...**

## வைரவநாதன்

தாருகனை கொன்றுவிட்டு பத்திரகாளி அம்மன் கைலாசத்திற்கு சென்று, சிவபிரானிடம் வரம் வாங்கலாம் என கிளம்பினார். அம்மை இரத்த வாடையுடன் வந்து கொண்டிருந்ததால் அவாளுக்கு மாமிச பசி இருக்கிறதா என்பதை அறிய வேண்டும் என்று நாராயணன், ஒரு பொன்வண்டை பிடித்து ஒரு குழந்தையாக மாற்றி, அம்மை வரும் வழியில் போட்டார், அம்மைக்கு மாமிச பசி இல்லாததால் அந்த குழந்தையை எடுத்து வந்து சிவபெருமானிடம் கொடுத்தாள். சிவன் அக்குழந்தைக்கு வைரவநாதன் என பெயரிட்டு பத்திரகாளியிடம் ஒப்படைத்தார்.

கோவில்களில் பத்திரகாளி அம்மனின் பீடத்திற்கு எதிரில் இருக்கும் பீடங்களுக்கு பொதுவாக 4 படையல்கள் போடப்படும். அந்த 4 படையல்களும் அம்மனின் 4 பிள்ளைகளுக்கும் உரியது...



www.aanmeegamalar.com

# “ஆ(ம)ஹா பாரதம்”



பாகம் 23

உலகில் இப்போது இருக்கும் நாகங்களில் பயங்கர உருவமும், விஷமும் கொண்டவைகளே அதிகமாக இருக்கின்றன. மக்களின் நன்மையைப் பொருட்டே கத்ருவின் சாபத்தை தடுக்க வில்லை. ஜனமேஜயன் செய்யப் போகும் யாகத்தில் மக்களைத் தீண்டிக் கொண்டிருக்கும் பாவம் நிறைந்த நாகங்கள் தான் அழியும்.

பாவம் நிறைந்த நாகங்கள் என்று பிரும்மா குறிப்பிடுவதற்குக் காரணம், உலகில் உள்ள மக்களுக்கு அவைகளால் தான் துன்பம் ஏற்படும் என்பதாலும் அவைகளால் மீதமுள்ள தர்மாத்வாக்களான நாகங்களுக்கும் தீமை ஏற்படும் என்பதாலும் இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை (நமக்கு) எடுத்துக்காட்டுகிறார்.

தர்மாத்மாவானவைகள் எதுவும் அழியாது. இப்போது நாகங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த பயமானது அப்போது விலகிவிடும். இதுவும் ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டே நடக்கிறது.

அந்த காரணத்தைக் கேளுங்கள். யாயாவர குலத்தில் ஜரத்காரு எனும் முனிவர் ஒருவர் தோன்ற இருக்கிறார். மன இந்திரியங்களை தன் கட்டுப்பாட்டில் வைத்து தவம் புரிபவரான அவரது மகன் ஆஸ்தீகனே யாகத்தை நிறுத்துவான். அதன் மூலம் தர்மாத்மாவான நாகங்கள் பிழைத்து விடும்.



ஜரத்காரு எனும் பெயரால் பிரசித்தியாகப் போகும் இவர் தன் பெயருடைய சர்ப்பராஜன் வாசுகியின் தங்கையான ஜரத்காருவை திருமணம் செய்துக்கொண்டு அவள் மூல மாகவே சக்தி வாய்ந்த புதல்வனைப் பெறுவார். அவனே நாகங்களை விடுவிப்பான்” என்றார்.

(இவையனைத்தையும் எலாபத்ரன்தான் சொல்லிக் கொண்டு வருகிறான்)

கத்ரூ சாபமிடும் போது பயந்து, அவள் மடியிலேறிக் கொண்ட எலாபத்ரன் பின் வருமாறு சொன்னது: “தேவர்கள் அனைவரும் இதைக் கேட்டு விட்டு அப்படியே ஆகட்டும் என்று கூறினர். பிரம்மாவும் தன்லோகம் சென்று விட்டார். அதனால் வாசுகியே ! எங்கள் பயத்தை நீக்க, ஜரத்காருவிற்கு தங்களின் சகோதரியை கன்னிகை பிக்ஷையாக அளித்து சாப விமோச்சனம் பெறும் வழியைக் கூறுகிறேன்” என்றது.

மீண்டும் சூதர் பேசத் துவங்கினார். “எலாபத்ரன் சொன்னதும் நாகங்கள் எல்லாம் அமைதியடைந்தன. வாசுகியும் தனது தங்கையை சிறப்பாக வளர்த்து வந்தார்.

ஒரு மனிதனின் சோதனை காலம் உடனடியாக தீர்க்கக் கூடிய ஒன்று அல்ல. அது தேவர்களாக இருந்தாலும் சரி. அவர்களும் அது தீரும் நாள் வரும் வரை காத்திருந்தே தீர வேண்டும். கத்ரூவின் சாபத்தைப் போக்கிக் கொள்ள எத்தனை ஆண்டு காலம் இவர்கள் காத்திருந்தனர் என்பதும், கருட பகவானின் தாயாரான வினதா தன் அடிமைத்தளையிலிருந்து விடுபட எத்தனை ஆண்டு காலம் காத்திருந்தாள் என்பதையெல்லாம் நாம் கவனிக்க வேண்டும்.

ஒரு சில காலம் சென்ற பிறகு தேவாசுரர்கள் மேரு மலையின் கயிறாக வாசுகியைக் கொண்டு கடலை கடைந்தனர். அது முடிந்ததும் தேவர்கள் அனைவரும் மகிழ்ந்திருந்தனர். ஆனால் வாசுகி மட்டும் தாயின் சாபத்தால் கவலையுற்றிருந்தார். அதைக் கண்ட தேவர்கள் பிரம்மனிடம் வாசுகியின் கவலையைப் போக்கி அருளுங்கள் என்று வேண்டினர்.

பிரம்மா “இதற்கு முன்பு வாசுகியிடம் எலாபத்ரன் கூறிய விஷயத்தை நானே தூண்டி கூற வைத்தேன். ஜரத்காரு முனிவர் இப்போது கடுமையான தவத்திலிருக்கிறார். சமயம் வரும் போது நாகராஜனே உரியதைச் செய்வார். அவசியம் நேரும்போது வாசுகி தன் சகோதரியை முனிவர்க்கு அர்ப்பணிக்கட்டும்.

தேவர்கள் பிரும்மனிடம் வந்து முறையிட்டாலும் “சமயம் வரும் போது” என்று பிரும்மா சொல்வதை கவனிக்க வேண்டும். நேரம் காலம் வராமல் எதற்கும் தீர்வு கிடைக்காது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அது பிரும்மாவாக இருந்தாலும் சரி அது தான் விதி.

ஜனமேஜயனின் யாகத்தில் பாவமிகுந்த நாகங்களே அழியும். தர்மாத்மாவானவை பிழைத்து விடும் எனும் எலாபத்ரனின் வார்த்தையே நன்மையைத் தரப்போவதும் . நடக்கப் போவதும். அவைத் தவிர வேறு ஒன்றும் நடக்க முடியாது” என்றார்.

பிரும்மா கூறியதைக் கேட்ட வாசுகி “ நாகர்களே! எனது தங்கையை ஜரத்காரு முனிவருக்கே திருமணம் செய்து கொடுக்கப் போவது உறுதியானதால் நீங்கள் அனைவரும் அம்முனிவர் இருக்குமிடத்தை அறிந்துக் கொள்ளுங்கள். மற்றும் அவர் தனக்குரிய பத்தினியை தேட முற்படும் சமயத்தை அறிந்து லந்து எனக்குத் தெரிவியுங்கள்” என்றது.

சௌனகர் “சூதரே! ஜரத்காரு முனிவருக்கு எதனால் அந்தப் பெயர் உண்டானது” என்று கேட்டதற்கு ; சூதரானவர் “ சௌனகரே! ஜரத் என்றால் க்ஷயம், காரு என்பது பயங்கரமானதை குறிப்பதாகும். முதலில் அவரது உடல் புஷ்டியாக இருந்தது. பிறகு தனது தீவிர தவத்தால் அவ்வுடலை க்ஷீணமாக்கி விட்டார் என்றதும், சௌனகர் அடுத்ததாக ஆஸ்தீகர் பிறப்பைப் பற்றி கூறும்படி கேட்க அதன்படியே சூதரும் கூறத்துவங்கினார்.

ஜரத்காரு மகரிஷி ஸதா சர்வகாலமும் தவத்திலேயே இருந்துக் கொண்டிருந்தார். இந்திரியங்களை கட்டுப்படுத்திக் கொண்டும் வேதாத்யயனம் செய்து கொண்டும் இதிலேயே எண்ணம் வைத்திருந்தாரேயன்றி பெண்ணைப் பற்றிய சிந்தனையே இல்லாதிருந்தார்.

இந்த சமயத்தில் ஒரு நாள் உலகில் பரீக்ஷித் மகராஜன் அரசாண்டுக்கொண்டிருந்தார். ஒரு சமயம் வேட்டைக்கு வந்த பரீக்ஷித் ஒரு விலங்கை அடித்தார். அவ்விலங்கு பட்ட அடியோடு ஓடிவிட அதனை துரத்திக் கொண்டே சமீக முனிவரின் ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்.

மிகவும் களைப்படைந்த பரீக்ஷித் தாகத்துடனும் இருந்தார். அப்போது அங்கே ; பசுக்களிடம் கன்றுகள் பால் அருந்தும் போது வரும் நுரையை மட்டும் உண்டு வாழ்ந்த சமீகர் தவத்திலிருப்பதைக் கண்டார். அவரிடம் “நான் அபிமன்யுவின் பிள்ளை பரீக்ஷித் . என்னால் அடிபட்ட ஒரு விலங்கு இங்கு ஓடி வந்தது அதை நீங்கள் கண்டீர்களா? என்று பல முறை

www.aanmeegamalar.com





ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

**மற்றவர்களும் பயன்பெற அறிமுகப் படுத்துங்கள்...**

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

**whatsapp: 8825844033**
**aanmeegamalar@gmail.com**

கூறியும் முனிவர் பதிலளிக்கவில்லை.

முனிவர் தவத்திலும் மௌனத்திலும் இருந்ததால் பதில் ஏதும் கூறாது இருந்தார். இதனால் மிகுந்த கோபமடைந்த அரசன் அங்கு ஓரிடத்தில் இறந்து கிடந்த ஒரு பாம்பை எடுத்து முனிவரின் மீது போட்டு விட்டான். முனிவர் அதை பொருட்படுத்தாமல் விட்டு விட்டார். அதனால் அவர் மன்னரிடம் எதுவும் கூறவில்லை.

பரீக்ஷித் ராஜன் மிகுந்த தர்மவான். ஒரு சாதாரண மனிதரிடத்திலேயே மிகுந்த பணிவுடன் நடந்து கொள்பவன். அப்படிப்பட்டவன் குரூர புத்தியுள்ளவனுக்குக் கூட தோன்றாத ஒரு செயலை செய்கிறான் என்றால் காலம் அவனை தன் வசப்படுத்தி விதியின் வசம் ஒப்படைக்கப் போகிறது என்பது தெளிவாகிறது.

முனிவரின் மீது தான் போட்ட பாம்போடும் அவர் அமைதியாய் தவத்திலேயே இருந்த காட்சியை கண்டதும் பரீக்ஷித்திற்கே மனக்கஷ்டமாக இருந்தபடியால் தன் கோபத்தை தளர்த்திக் கொண்டு தன் தலைநகருக்குச் சென்று விட்டார்.

விதி தனது செயலை செய்ய தலைப்பட்டு விட்டாலும், ஆழ்மனத்தில் முன்பு செய்து வந்த தர்மச் சிந்தனைகள் அவ்வப்போது எட்டிப் பார்க்கத்தானே செய்யும். அதுதான் பரீக்ஷித்தை சிந்திக்கச் செய்தது.

பரீக்ஷித்தின் இந்த செயலால் மகரிஷியானவர் சிறிதும் கோபப்படவில்லை. காரணம் அரசன் ஒரு தர்மவான் என்பதால். மகரிஷி அரசரை அறிந்திருந்த அளவிற்கு அரசன் மகரிஷியின் உள்ளக் கருத்தை அறிந்திருக்கவில்லை.

பரீக்ஷித்தின் இந்த செயலை கவனித்தது இரு கண்கள். அது நேரே மகரிஷியின் மகனான ச்ருங்கியிடம் தெரிவிக்கச் சென்றது.

ச்ருங்கி, சமீக மகரிஷியின் புதல்வன். மிகவும் தபோபலம் நிறைந்தவன். ஒழுக்கமுடையவன். விரதம் காப்பவன். அதே சமயம் கோபம் மிகுந்தவன். தந்தையே குருவாகவும் இருப்பதால் அடிக்கடி குரு சேவைக்கு வருவதுமுண்டு.

அன்று அப்போதுதான் வீட்டிற்குச் சென்றிருந்தான். சென்று விட்டுத் திரும்பி வரும் வழியில்" க்ருசன்" எனும் முனிக் குமாரனைக் கண்டான். காட்டில் நடந்த அனைத்து விஷயங்களையும் அவன் எடுத்து சொன்னதும் ச்ருங்கியின் கண்கள் சிவந்தன. இதயம் படபடத்தது. மிகக் கடுமையான விஷத்தைப்போலானான்.

ச்ருங்கியின் கோபத்தை மேலும் தூண்டி விடுபவனாய் க்ருசன் “உன் தவ வலிமை இப்போது எங்கே? உன் தந்தை செத்தப் பாம்பை உடலில் போட்டுக் கொண்டு திரிகிறார் என்றால். நீ மிகவும் கர்வத்துடன் திரிகிறாய், பேசுகிறாய். என்னைப் போன்றவர்கள் முன்னே வரக்கூடாதவன் நீ.. பெற்ற தந்தைக்கு அவமானம் என்றதும் துடிக்காமல் இருக்கிறாய். ஆண்மையுள்ளவனாய் இல்லாமல் பேடியாக இருக்கிறாயே? நடந்தது உன் தந்தைக்கு என்றாலும் என் தந்தைக்கு நேர்ந்தது போலிருக்கிறது எனக்கு “ என்றான்.

ச்ருங்கியின் கோபம் அதிகரித்து அது சாபமாய் மாற்றம் பெறத் துவங்கியது. அந்த நேரத்தில்........?

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577





**பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் சிறுவாபுரி**

**வள்ளி மணவாளப் பெருமானுக்கு**

**கல்யாண மஹோற்சவம்**

**9-ம் ஆண்டு**



**12.08.2018 ஞாயிற்றுக் கிழமை**

**அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழு, சென்னை**

திருமண பிரார்த்தனை நிறைவேற பங்கேற்று

**நல்ல மணவாழ்க்கை பெறுக!!**

**அனுமதி இலவசம்**

9940625308 / 9944309651 / 9790957592
9841807572 / 9944309719

அனைவரும் வருக! முருகன் அருள் பெறுக!!!

விதுர நீதி

# இன்பமும், துன்பமும் தற்காலிகமாக வந்து செல்லும்நிகழ்ச்சிகளாகும்

ஒருவன் நல்ல மனிதர்களால் மதிக்கப்பட்டு, எந்தப் பற்றும்இல்லாமல்கடமைகளை செய்து வந்து, தனது ஆற்றலை வீணாக்காமல் உழைத்து வந்தால் அவன் விரைவில்புகழ்பெறுவான்.ஏனெனில், சான்றோரிடம் நாம் திருப்தித் தரும் விதத்தில் நடந்து கொண்டால், அவர்கள் நம் வாழ்வை மகிழ்ச்சி ஏற்படும்படி செய்யும் வல்லவர்கள் ஆவர்

ஒரு பொருளோ, பரிசோ, பதவியோ தவறான வழிமுறையைப் பின்பற்றி வாங்கப்பட்டிருந்தால் நாம் உடனே அதைமறுத்து விட வேண்டும்.

பாம்பு தன் சட்டையை உரித்த பின் அதை அப்படியேபோட்டு விட்டுச் செல்வது போல, தவறான வழியில் கிடைக்கும் எதன் மீதும் பற்று வைக்காது உதறித் தள்ளினால் நாம் எத்துன்பமும் இன்றி சந்தோஷமாக வாழலாம்

பொய் வழக்கு மூலம் மேன்மை பெறுவதும், அரசர் மீது வெறுப்புகொண்டு, அவரை பகைத்து கொள்வதும், குருவிடம் தவறான தகவல்களைத் தெரிவித்து அவை சரியானவைதான் என பிடிவாதமாகக் கூறுவதும்... வேதம் படித்த அறிஞனைக் கொல்வதற்குச் சமமாகும். (வேதம்படித்தவன் அறிவு, ஒழுக்கம், பண்பு, லட்சியம், எளிமை, ஆன்மீக நாட்டம், புலன்களைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் முதன்மையானவர்கள்ஆவார்கள்)

பொறாமை குணம் சாவதற்கு சமமாகும். கடுஞ்சொற்கள் சொல்வது, வசைமாரி பொழிவது, நமது செல்வச் சிறப்புகளுக்குச் சாவுமணி அடிப்பதற்கு சமமாகும்.

ஆன்மீக குரு உபதேசம்செய்கையில் கவனிக்காமல் இருப்பது, எதற்கெடுத்தாலும் அவசரப்படுத்துவது, தற்பெருமையடித்துக் கொள்வது, ஆகியமூன்றும் நம்மைக் கல்வியறிவில் முன்னேறாமல் தடுக்கும் பகைவர்கள்ஆகும்.

சோம்பேறித்தனம்,
கர்வத்தால் மனம்கெடுதல்,
தடுமாற்றம்,
கூட்டமாக அரட்டைஅடித்தல்,
முரட்டுப் பிடிவாதம்,
போலித்தற்பெருமை,
சுயநலம்

ஆகிய ஏழும் நம்மை சுற்றி வளைத்துக் கொண்டு கெடுதல் செய்கின்ற பாவங்களாகும் வாழ்க்கையில் புலன் இன்பங்களைத்தேடி அலைபவர்கள், கல்வி, கேள்விகளில் எப்படி சிறப்பு அடையமுடியும்?

அது போலவே...

அறிவை வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுள்ளவன் சுகத்தைத் தேடி அலையக்கூடாது.

வாழ்க்கையில் வசதிகள் தான் முக்கியம் என நினைப்பவன், அதே நேரம் அதிக அறிவையும் பெற்றிட வேண்டும் என்ற ஆசையைக் கைவிட வேண்டும்.

படிப்புதான் முக்கியம் என நினைப்பவன், வசதிகளுக்கும், இன்பங்களுக்கு ஏங்கக்கூடாது

எவ்வளவுதான் கரி, விறகுகள் போட்டாலும் நெருப்பு திருப்தி அடையாது.

எத்தனை நதிகள் வந்து கலந்தாலும் கடல் திருப்தியடையாது புதிதாக வருவதையும் ஏற்கும்.



கோடிக்கணக்கான உயிர்களை கவர்ந்து சென்ற பின்னும் சாவுக் கடவுளுக்கு திருப்தியாகவில்லை.

அழகிய பெண், எத்தனை ஆண்கள் தன்னைப் பார்த்து மயங்கினாலும், அனைவரும் தன் அழகுக் கண்டு மயங்க வேண்டும் என எண்ணுவாள்.

ஆசை சுயக்கட்டுப்பாட்டை அழிக்கும்.

சாவு, வளர்ச்சியைத் தடுத்து அழிக்கிறது. கோபம் செல்வத்தை அழித்து விடும்.

கருமித்தனம் புகழைக் கொல்லும். பராமரிப்பில் அக்கறையில்லா விடின் பசுக்கள் இறந்துவிடும்.ஒரு அந்தணர்க்கு சினம் ஏற்பட்டால். ஒரு பேரரசையே அழிக்கும்.

நம்முடைய வீடுகளில் ஆடுகள், வெண்கலப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், தேன், விஷமுறிவு மருந்துகள், பறவைகள் முதலியவற்றையும், புனித நூல் கற்ற அந்தணர், வயதான உறவினர், துன்பத்தில் சிக்கிக் கொண்ட உயர் குடிப்பிறப்பினர் ஆகியவர்களையும் பராமரிக்க வேண்டும்

ஆடுகள், எருதுகள், சந்தனம், வீணை, முகம் பார்க்கும் கண்ணாடி, தேன், நெல், இரும்பு, தாமிரம், சங்கு, சாலகிராமம், மஞ்சள், கோரோஜனை ஆகியவை மங்களப் பொருட்களாகக் கருதப்படுகிறது

மேற்கண்ட பொருட்களை நாம் வீட்டில் தயாராக வைத்திருக்க வேண்டும் என மனு அறிவுறுத்துகிறார். ஏனெனில், அவை பூஜைக்கும், பெரியவர்களை வழிபடவும், விருந்தினரை உபசரிக்கவும் பயன்படும் என மனு கூறியுள்ளார்

இன்னொரு நேர்த்தியான விஷயம் நாம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய அறவழியைக் கைவிடக்கூடாது. எதன் மீதாவது விருப்பம் கொண்டோ, எவரிடமும் பயந்தோ, எதற்காகவாவது பேராசைப்பட்டோ தர்ம நெறியிலிருந்து விலகக் கூடாது.

அறம் நிரந்தரமானது...

ஆனால் இன்பமும், துன்பமும் தற்காலிகமாக வந்து செல்லும்நிகழ்ச்சிகளாகும்.

வாழ்க்கை நிரந்தரமானது...

ஆனால் அது எடுக்கும் வடிவங்கள் மாயையானவை.

நிகழ்ச்சிகள் மீது நாம்பற்றுக் கொள்ளக் கூடாது.

நிரந்தரமானவற்றை நாம் பற்றிக்கொண்டு திருப்தியுடன் வாழவேண்டும். நல்ல மனிதர்கள் இத்தகைய திருப்தியை அடைவதிலேயே முழுக்கவனமும் செலுத்துவார்கள்


## ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்

8825844033

# மரணம் என்றால் என்ன?

# சிந்திக்க தூண்டிய அப்பா பைத்தியம் சுவாமிகள்



அப்பா பைத்தியம் சாமிகள் என்றொருவர், பாண்டிச்சேரியில் இருப்பதாக தொண்ணுறுகளின் ஆரம்பத்தில் கேள்விப்பட்டேன். அவர் நூறு வயதை கடந்தவர் என்றும், பல சித்துக்கள் தெரிந்தவர் என்றும் அவரைப்பற்றி அறிந்தவர்கள் கூறினார்கள். எனக்கு அவரை பார்க்கவேண்டும் என்ற ஆர்வம் வந்தது. அப்போது என்னிடத்தில் பாண்டிச்சேரி செல்வதற்கான சரியான வாகனவசதி கிடையாது. இருந்தாலும், ஆர்வத்தை அடக்க முடியுமா? எனது நண்பரும் அரகண்டநல்லூர் வேளாண்மை வங்கியின் செயலாளருமான நடேசப்பிள்ளை சுப்பிரமணியனிடம் புதுவை சென்று சுவாமிகளை தரிசனம் செய்து எனது நிலையையும் கூறி அவரை நான் காண்பதற்கு ஆர்வமாக உள்ளதையும் சொல்லி ஒருமுறை அவரை நம்மிடத்திற்கு வரமுடியுமா என்று கேட்டுப்பார் என அனுப்பி வைத்தேன்.

நண்பர் சென்று, அப்பா பைத்தியம் சாமியிடம் நான் சொன்ன தகவலை கூறி இருக்கிறார். அதை கேட்டவுடன் அவர் வாய்விட்டு சிரித்து என்னை வந்து பார்ப்பதற்கு நூறு பேர் காத்திருக்கும் போது நான் வந்து அவனை பார்க்க வேண்டுமென்று சொன்னானா? கடவுளின் சித்தம் அதுவானால் கண்டிப்பாக வருகிறேன் போ என்று பதில் சொல்லி அனுப்பி விட்டார். வருவேன் என்று சொன்னாரே தவிர எப்போது வருவேன், என்று வருவேன் என்ற விபரம் எதுவும் சொல்லவில்லை. வரமாட்டேன் என்று கூறுவதற்கு பதிலாக இப்படி கூறி அனுப்பி இருப்பார் என்று மனதை தேற்றிக்கொண்டு அதை மறந்தும் போய்விட்டேன்.

தொண்ணூற்றி எட்டாம் வருடம் அக்டோபர்மாதம் கடைசிவாரம் என்று நினைக்கிறேன். நல்ல மழை நேரம். நான் இருந்த சமிதியின் கட்டிடத்தைச்சுற்றி வெள்ளம் முட்டிகால் அளவு நின்றுகொண்டிருந்தது. இன்னும் சிறிது தண்ணீர் அதிகரித்தால் கட்டிடத்திற்குள் வந்துவிடும் அபாயமும் இருந்தது. ஆற்றில் வெள்ளம் நிரம்பி ஓடி கட்டிடத்திற்கு பின்னால் இருந்த வாய்க்கால் தண்ணீரை ஏற்றுக்கொள்ள முடியாமல் தேங்கி நின்றதனால் இந்த வெள்ள அபாயம் ஏற்பட துவங்கி இருந்தது. நானும் சமிதியில் வளரும் சில குழந்தைகள் மட்டுமே தனியாக இருந்தோம். இரவு மணி பத்து இருக்கும். வெளியில் சாலையில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. சிறிது நேரத்தில் யாரோ கதவை தட்டினார்கள் பையன் சென்று கதவை திறந்தான்.

ஒல்லியாக உயரமாய் ஒருமனிதர் வந்து அப்பா பைத்தியம்சாமி உங்களை பார்ப்பதற்காக வந்திருக்கிறார். அவரை அழைத்து வரட்டுமா? என்று கேட்டார் எனக்கு என்னையே நம்ப முடியவில்லை. இத்தனை வருடம் கழித்து தான் சொன்னதை மறக்காமல் மனதில் வைத்து ஒருவர் வந்திருக்கிறார் என்றால் அவரை எந்த வார்த்தைகளால் பாராட்டுவது? வணங்குவது என்று எனக்கு தெரியவில்லை. ஆனந்தத்தின் உச்சிக்கே சென்ற நான் தலையை மட்டுமே ஆட்டினேன் சிறிது நேரத்தில் சுவாமி அவர்களை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து மூன்றுபேர் தூக்கி கொண்டுவந்து என் முன்னால் உட்கார வைத்தார்கள். நன்றாக நடப்பேன். இரண்டு நாட்களாக கால் வீங்கி விட்டது. அதனால் நடக்க முடியவில்லை. வேறொன்றும் இல்லை என்று ஒரு குழந்தையை போல சாமிகள் சொன்னார்.

நானும், அவரும் வெகுநேரம் பல விஷயங்களை பற்றி பேசிக்கொண்டிருந்தோம். கடைசியில் நான் அவரது வயதைப்பற்றி கேட்டேன். தனக்கே உரிய பாணியில்



கடகடவென்று சிரித்த அவர், அரவிந்தர் பாண்டிச்சேரிக்கு வரும்போது நானும் அங்கிருந்தேன் என்றார். அவர் சொன்ன காலத்திற்கும், தற்போதைய காலத்திற்கும் கணக்குப்போட்டு என் தலை சுற்றியது. நூறு வயதை மட்டுமல்ல, அதையும் தாண்டி சில பத்து வருடங்கள் அவர் வயது எனும் போது வியப்படையாமல் எப்படி இருக்க முடியும்? ஒருவேளை இவர் தன்னை பெரியதாக மற்றவர்கள் கருதவேண்டும் என்பதற்காக இப்படி கூறுகிறாரோ என்ற ஒரு சந்தேகம் எனக்கு தோன்றியது. அதை கவனித்த அவர் நீ நம்பவில்லை என்றால் கைதட்டி சித்தர் என்ற ஒருவர் திருக்கோவிலூர் வெள்ளைப்பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் சமாதியாகி இருக்கிறார். அவருடைய வாரிசுகள் ரிஷிவந்தியத்தில் இருக்கிறார்கள். அவர்களிடம் கைதட்டி சித்தரோடு நான் எடுத்த புகைப்படம் இருக்கிறது வேண்டுமானால் பார்த்துக்கொள் என்று கூறினார்.

அதற்குமேலும் அவர் சொற்களில் நான் நம்பிக்கை காட்டவில்லை என்றால் என்னைவிட முட்டாள் யாரும் இருக்க மாட்டார்கள். பிற்காலத்தில் சுவாமிகள் சொன்னது முற்றிலும் சரி என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேன். எனவே அப்போது அவரிடம் ஒரு கேள்வி கேட்டேன். பல சித்தர்கள் பலநூறு வருடங்கள் வாழ்வதாக கேள்விப்பட்டிருக்கிறேன். திருமூலர் கூட, மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக அறிந்தும் இருக்கிறேன். நூற்றாண்டை கடந்து மனிதனால் வாழமுடியும் என்பதற்கு நேரடி சாட்சியாக இதோ நீங்களும் இருக்கிறீர்கள். இப்படி அதிகநாள் வாழ்வதற்கும், மனிதன் ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கும் ஏதாவது சம்மந்தம் இருக்கிறதா? குறைந்தநாள் வாழ்ந்தால் ஆன்மீகத்தில் முன்னேற முடியாதா? ஆமாம் என்று நீங்கள் பதில் சொன்னால் ஆதிசங்கரரும், சுவாமி விவேகானந்தரும் மிக குறுகிய காலம் தானே பூமியில் வாழ்ந்தார்கள். அவர்கள் ஆன்மீகத்தில் முன்னேற வில்லையா? என்று கேட்டேன்.

அதற்கு அவர் உடனடியாக பதில் கூறவில்லை. சுற்றி வளைத்து பல காரியங்களை பேசி விட்டு இறுதியாக விஷயத்திற்கு வந்தார். உன்னை நீ முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்த பிறகு உனது இயக்கம் உன் கையில் கிடையாது. இறைவன் உனக்கு விதித்திருக்கும் வேலை முடியும் வரை நீ வாழ்ந்திருக்க வேண்டும். ஒருவனுக்கு பத்துவருடத்தில் வேலை முடிகிறது. வேறொருவனுக்கு நூறு வருடமானாலும் வேலை முடிவதில்லை. அதற்காக முடித்தவன் மேலானவன், முடிக்காதவன் கீழானவன் என்றில்லை. எல்லோரும் சமமே. இறைவனின் காரியத்தை நடத்தி செல்ல சரீரம் என்ற ரதம் வாழ்வின் கடைசி முனை வரை ஓடி வரவேண்டும் பாதியில் நின்றுவிட்டது என்றால், நீ அடுத்த ரதத்தில் ஏறவேண்டும். அதாவது இன்னொரு பிறப்பை நீ அடையவேண்டும். இந்த பிறவியிலேயே காரியத்தை முடித்து கடவுளிடம் செல்ல வேண்டுமானால் உடம்பை பாதுகாக்க வேண்டும் மரணத்தை தள்ளிப்போடவேண்டும்.

சித்தர்கள் பலர் மரணத்தை தள்ளி போட்டிருக்கிறார்கள். அதை வென்றும் இருக்கிறார்கள் அப்படிப்பட்ட சித்தர் பரம்பரை இன்றும் தொடர்கிறது. இனிமேலும் தொடரும் மரணம் இல்லாத பெருவாழ்வு என்பது ஆத்மாவை மட்டும் குறிப்பது அல்ல, உடலையும் குறிக்கிறது. இது ஊத்த சடலம். உப்பிருந்த பாண்டம் என்று சிலர் வெறுத்து ஒதுக்கினாலும் கூட அந்த ஊத்த சடலம் சில தேவைகளுக்கு தேவைப்படுகிறது. அதனால் தான் திருமூலர் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்கிறார். எல்லாம் சரி அதிக நாள் வாழ்வதை பற்றி கேட்கிறாயே அதிகம் நாள் வாழ்வது எப்படி என்று உனக்கு தெரியுமா? எல்லாம் போகட்டும் மரணம் என்றால் என்னவென்று நீ அறிந்திருக்கிறாயா? இன்றுவரை மரணத்தை பற்றி நீ யோசித்ததுண்டா? என்று என்னிடம் மிக தீர்க்கமாக கேள்விகளை கேட்டார். அன்று முதல் சிந்திக்க துவங்கினேன் மரணம் என்றால் என்னவென்று?

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 9442426434

## சுப நிகழ்ச் பத்திரிகையில் மஞ்சள் வைப்பது ஏன்?

மஞ்சள் என்பது மங்களத்தின் அடையாளம். சுப நிகழ்ச்சிகள் துவங்கும் போது பிள்ளையார் பிடிப்பதிலிருந்தே மஞ்சளின் உபயோகம் ஆரம்பித்து விடுகிறது. மஞ்சள் பயன்பாடு இவைகளுக்காக மட்டுமில்லை. மஞ்சள் நல்ல கிருமி நாசினி. அது இருக்கும் இடத்தில் பூச்சி பொட்டுகள் அவ்வளவு சீக்கிரம் அண்டாது.

அதனால் தான் திருமணம் போன்ற சுப நிகழ்வுகளுக்கு வைக்கப்படும் அழைப்பிதழ்களின் ஓரங்களில் மஞ்சள் பூசப்படும். திருமண பத்திரிக்கைகள் சம்பிரதாயங்களுக்காக உள்ளது மட்டுமல்ல. அதில் மனிதனின் நிகழ்வுகளும் மறைந்து கிடக்கிறது. ஐம்பது வருடத்திற்கு முன்பு நடந்த திருமணத்தை அன்று அச்சடித்த அழைப்பிதழ்களை தொட்டு பார்த்தவுடனே நேராக அனுபவிப்பது போன்ற சுகம் கிடைக்கும்.

கறுப்பு இருட்டு அண்டிய இடங்கள் விரைவில் அழிந்து விடும். ஒரு அறையை வெகுநாட்களாக பயன்படுத்தாமல் வைத்திருந் தோமேயானால் அங்கே இருள் இருபத்தி நான்கு மணி நேரமும் மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும். சிறிது சிறிதாக சுவர்கள் ஈரமாகி கரையான்கள் அரித்து அறை யாருக்கும் பயன்படாதவாறு ஆகிவிடும்.

மரணம் என்பது மறக்கபட வேண்டிய நிகழ்வு. இறந்து போனவனையே நினைத்து கொண்டிருந்தால் வாழ்பவன் பிணமாகிவிடுவான். உயிர்கள் அணைத்து வாழ்விலும் சாவு என்பது தவிர்க்க முடியாதது என்றால் அதை எப்போதுமே நினைத்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் தான் மரணம் சம்மந்தப்பட்ட பொருட்கள் அனைத்தையும் விரைவில் அழிந்து போகுமாறு உருவாக்குகிறோம். கருமாதி பத்திரிக்கையில் பூசப்படுகின்ற கறுப்பும் அந்த காகிதத்தை விரைவில் செல்லரிக்க வைத்துவிடும்.




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.







# நாடு முழுவதும் 109 இடங்களில் கொண்டாடப்பட்ட குருபூர்ணிமா மகோத்சவம்

'ஹிந்து ராஷ்ட்ர'த்தை ஸ்தாபனம் செய்வது ஸ்ரீ குருவின் காரியமாகும் – திரு ஜெயகுமார்

'இந்தியா சுதந்திரம் அடைந்தது, ஆனால் நாம் பிரிட்டிஷ் ஆட்சிப்படியான நீதித்துறை, கல்வித்துறை மற்றும் அரசாட்சி அமைப்புகளை அப்படியே ஒப்புக் கொண்டதால் நாம் உண் மையில் சுதந்திரத்தை அடையவில்லை. ஒரு புறம் நம் நாடு 'செக்யுலர்' எனப்படுகிறது, மறுபுறம் சிறுபான்மையினருக்கு பல சலுகைகள் அள்ளி வழங்கப்படுகின்றன.

இதுவே இன்றைய பாரதத்தின் நிலைமை. இரண்டாந்தர குடிமகக்களாக ஹிந்துக்கள் கருதப் படுகின்றனர். அதனால் ஹிந்துக்கள் மறுபடியும் தங்களின் சுய மரியாதையுடன் வாழ்வதற்கு 'ஹிந்து ராஷ்ட்ரத்தை அமைப்பது அவசியமாகிறது. இந்நோக்கத்தை அடைய நாம் தர்ம போதனை பெற்று தினசரி வாழ் வில் தர்ம வழிகளை கடைபிடித்து ஹிந்து ராஷ்ட்ரம் அமைப்பதற்கான மாபெரும் பணியில் பங்களிக்க வேண்டும்.

இன்றைய குருபூர்ணிமா சுபதினத்தில் நாம் அனைவரும் இப்பணியை நிறைவேற்ற உறுதி யேற்போம். தர்மப்படியான 'ஹிந்து ராஷ்ட்ர'த்தை அமைப்பது காலத்திற்கேற்ற குரு காரியமாகும்', என்று திரு ஜெயகுமார் அவர்கள் 29.7.2018 அன்று அண்ணாநகர், திரு அம்பேத்கர் ஹாலில் நடந்த குருபூர்ணிமா விழாவில் தன்னுரையில் கூறினார். இதேபோல் நாடெங்கும் 109 இடங்களில் குருபூர்ணிமா மகோத்சவம் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது.

பாரத் ஹிந்து முன்னணியின் தலைவர் திரு பிரபு அவர்கள் தன்னுடைய ஹிந்து தர்மப் பணியில் ஏற்பட்ட அனுபவங்களை, கற்றுக் கொண்டவைகளை பகிர்ந்து கொண்டார்.

திருமதி கல்பனா பாலாஜி அவர்கள் ஆன்மீக சாதனை பற்றிய வழிகாட்டுதலை வழங்கினார்.

'ஹிந்து ராஷ்ட்ரம் ஏன் தேவை?' என்ற சனாதனின் தமிழ் நூல் திரு ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு சிவசேனா தலைவர் அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.

திருஇலங்கையில் ஹிந்து ராஷ்ட்ரத்தை நிர்மாணிக்கும் பணியில் கடந்த வருடங்களுக்கு மேலாக பாடுபடும் திரு காசி அனந்தன் ஐயா அவர் களுக்கு இந்த சுப நாளில் திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் மரியாதை செய்து கௌரவித்தார்.

13 மொழிகளில் 'பேஸ்புக் லைவ்' மூலமாக குருபூர்ணிமா மகோத்சவ நிகழ்ச்சி நாடெங்கும் ஒளிபரப்பப்பட்டது. லக்ஷக்கணக்கானோர் இதை பார்வையிட்டு பயன் அடைந்தனர்.

முதலுதவி மற்றும் தற்காப்புக் கலையின் அவசியத்தைப் பற்றிய ஒரு குறும்படம் காண்பிக்கப்பட்டது.

150 ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட தர்மாபிமானிகள் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

இவ்வருடம் சனாதன் சன்ஸ்தா மற்றும் ஹிந்து ஜனஜாக்ருதி சமிதி, குருபூர்ணிமா மகோத்சவத்தை இந்திய மொழிகளான மராட்டி, ஹிந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, வங்காளம், ஒடியா, அஸ்ஸாமீஸ், குருமுகி மற்றும் அயல்நாட்டு மொழிகளான ஆங்கிலம் மற்றும் நேபாளி யில் நடத்தியது. இந்நிகழ்ச்சிகள்13 மொழி களில் 'பேஸ் புக் லைவ்' மூலமாகஒளிபரப்பப்பட்டு மிக பிரம்மாண்டமான வரவேற்பைவாசகர் களிடையே பெற்றது. பல லக்ஷம் பக்தர் கள் பாரதத்திலும் அயல் நாடுகளிலிருந்தும் இந்நிகழ்ச்சி மூலம் பயனடைந்தனர்.

– மேலும் தொடர்புகளுக்கு
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# தேர் இழுங்கள் நன்மை கிடைக்கும்

**– மகாபெரியவா கூறியது**

நிலக்கிழார் ஒருவர் சொத்து தகராறினால் மன அமைதி இழந்து தவித்த நேரத்தில் காஞ்சி மஹாபெரியவரை தரிசித்தார். அவருடைய அகவேதனைகளை உணர்ந்த பெரியவர் அவரிடம் "தேர் இழுத்திருக்கிறீர்களா?" என வினவ இல்லை என்றார் நிலக்கிழார்.

ஒரு முறை தேர்வடம் இழுத்துவிட்டு பிறகு உங்கள் பணியைத் தொடருங்கள் எல்லாம் நன்றாக முடியும் என ஆசீர்வதித்தார் மஹா பெரியவர். மூன்று மாதங்களுக்குப் பிறகு புன்னகையுடன் பெரியவரை சந்தித்த நிலக்கிழார் தீர்ப்பு எனக்கு சாதகமாக வந்தது தர்மம் தோற்பதில்லை என்ற நம்பிக்கை வந்துவிட்டது என்றார். "தேர் இழுத்தாயோ" என பெரியவர் வினவ ஆம் அதன்பின் தான் எல்லாம் நன்றாக நடந்தது. என்றார் நிலக்கிழார்...

தேர் என்பது நடமாடும் கோயில். முதியவர்கள் நோயாளிகல் மாற்றுத் திறனாளிகள்ஆலயத்துக்குச்சென்று இறைவனை தரிசிக்கமுடியாதவர்கள் தேர்த்திருவிழா அன்று இறைவனைக் கண்ணாரக் கண்டு களிக்க முடியும். கோயிலில் தெய்வசக்தி எப்போதும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. தேர்த்திருவிழா அன்றோ தெய்வ சக்தி ஊர் முழுவதும் வெளீப்படும் ஊருக்குள் இருக்கும் தீய சக்திகள் அனைத்தும் அப்போது பறந்தோடி விடும். தேர் இழுப்பவர்களில் பேதங்கள் கிடையாது. எல்லாவற்றிலும் பேதங்கள் பார்க்காத மனிதர்களாலேயே தம் பக்கம் இழுக்க முடியும் என்பதே தேரோட்டம் உணர்த்தும் உண்மை.

தேர் திருவிழாவில் கலந்து கொள்வதற்கும் தேர் இழுப்பதற்கும் தேரோட்ட திருவிழாவுக்கு உதவி செய்வதற்கும் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

பூர்வ ஜென்ம புண்ணீயம் இருந்தால்தான் நம்மால் தேர்த்திருவிழாவில் கலந்து கொள்ள முடியும். தேர்வடத்தைத் தொட்டுக்கொண்டு ஆயிரக்கணக்கான பேர் நிற்கும்போது அங்கே அபரிமிதமான மனித சக்தி பொங்கத் தொடங்குகிறது.

அத்தனை மனிதர்களும் கடவுளின் அரு ளை வேண்டி கூடியிருக்கும்போது அங்கே பிரார்த்தனையின் சக்தி மகத்தானதாக மாறுகின்றது. பக்தியுடன் தெய்வத்தை இழுக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக மக்கள் கருதுவதும் பக்தர்களின் பக்திப் பெருக்கைக்கண்டு தெய்வம் ஓடி வருவதும் தேர்த்திருவிழாவின் மகத்துவம் ஆகும். அந்த இடத்தில் தெய்வத்தின் சாந்நித்யம் அதிகரித்துள்ள இடத்தில் இருப்பதற்கே ஒருவரின் ஜாதகம் சரியாக அமைய வேண்டும்.

நிலக்கிழாரின் கர்மவினை அவரைத் தேர்த்திருவிழாவில் பங்கெடுக்க முடியாமல் செய்திருந்தது. ஆனால் ஒரு மஹானை தரிசித்த மாத்திரத்தில் அவரது பாப வினைகள் நீ ங் கி ய து ட ன் தேர்த்திருவிழாவிலும்கலந்துகொள்ளச் செய்தது. அதனால் கடவுளின் அருள் பலம் சேர வழக்கும் அவருக்கு சாதகமானது. தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதால் உண்டாகும் நன்மைகள்

- ❖ கடவுளின் அருள் பலம் கிடைக்கும்
- ❖ வெற்றி உண்டாகும்.
- ❖ நோய்கள் தீரும்
- ❖ பாபவினைகள் தீரும். வழக்கு சம்பந்தமான பிரச்னைகள் அகலும்.
- ❖ மனக்குழப்பங்கள் நீங்கி நிம்மதி கிடைக்கும்
- ❖ சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்

இத்தனை நன்மைகளைத் தரக்கூடிய தேர்த்திருவிழாவில் கலந்து கொள்வதும் உற்சவம் நடைபெற உதவி செய்வதும் தொண்டுகள் புரிவதும் நிறைந்த புண்ணியத்தைத் தரும்.





ஆன்மிகமலர் மெயில் புக்

# மின்னூல் வடிவத்தில்

## ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.